Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-19 | 05-10-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -230

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247

# சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான புலிகளின் முயற்சிக்கு ஹெல்கேசன் பாராட்டு!

## மகிழ்ச்சிக்குரியதெனத் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதான நடவழிக்கைகள் கைகூடாத நிலையிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது மகிழ்ச்சிக்குரியதே என நோர்வே துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.**


நேற்று சுவிற்சர்லாந்தில் வட கிழக்கு மனித உரிமைகள் அமைப்பு, விடுதலைப்புலிகளின் அரசியல்விவகார-சட்டவல்லுனர் குழுக்களுடனான சந்திப்புக்கள் நடைபெற்றன. அரசியலமைப்பு விவகார சட்டவல்லுனர் குழுவுடனான சந்திப்பில் விதார் ஹெல்கேசனும் கலந்து கொண்டு உரையாற்றினார். சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தொடர்ச்சியாக சமாதான முயற்சிகளை மேற்கொள்வதில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருப்பதாகவும், இதற்கு ஆதரவளிப்பதற்கு நன்றிகளை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

விதார் ஹெல்கேசன் தொடர்ந்து (12 ஆம் பக்கம் பார்க்க)



## பேச்சுவார்த்தைக்குத் திரும்ப புலிகளை ஊக்குவிப்பாராம்!

### - ச.ந. சபைக் கூட்டத்தில் சந்திரிகா



பேச்சுவார்த்தைக்குத் திரும்புமாறு விடுதலைப்புலிகளை ஊக்குவிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார். நேற்று தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சமாதானம் நல்லி (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மனித உரிமைகள் அமைப்பு சர்.மனித உரிமைகள் அமைப்பு சந்திப்பு

சுவிற்சர்லாந்தில் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் அமைப்பு பிரதிநிதிகளுடனான சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் சந்திப்பு இடம் பெற்றது.

சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்பின் முன்னாள் தலைமைச் செயலாளர் நாயகமும் சிறிலங்கா மனித உரிமைகள் அமைப்பிற்குத் தலைமை தாங்கும் குழுவின் தலைவருமானதிரு. இயன் மார்ட்டீன் அவர்களுடன் சுவிற்சர்லாந்து மனிதஉரிமைகள் நிறுவனத்தின் மனித உரிமைகளுக்கான அறிஞர் பாஸ்கெல் பரிஸ்வைல் ஆகியோர் இதில் விரிவுரைகளை நிகழ்த்தினர். இதில் விதார் ஹெல்கேசன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மனித உரிமைகள் குறித்த இந்த கரிசனையை வரவேற்பதாக அவர் இதில் தெரிவித்தார். இன்று வடகிழக்கு மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளுக்கான பட்டறை ஒன்றை சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளரான கரியின் ரயின்பர் நடத்தவுள்ளார். இவர் ஐ.நாவில் தமிழர்களின் மனித உரிமைகள் பிரச்சினை தொடர்பாக குரல் கொடுத்து வருபவருமாவார்.

## அன்ரன் பாலசிங்கம் லண்டன் திரும்பினார்

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்முடனான கலந்துரையாடலின் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் லண்டன் திரும்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அவர்கள் லண்டன் திரும்பியுள்ளனர்.

## பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் போது முன்னெடுக்க வேண்டியவை குறித்து ஆராய்ந்தோம்

### ஜெனீவா மாநாடு குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

தற்போது இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடக்கமடைந்துள்ள சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பால் அதிகார பூர்வமாக முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்கள் தொடங்குகின்றபோது முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் கூடுதலான நேரம் விவாதித்து பலவிடயங்களைத் தீர்மானித்துள்ளோம் என விடுதலைப்புலிகளின் அரசியல் விவகார சட்ட வல்லுனர் குழுவின் ஜெனீவா மாநாடு குறித்த பி.பி.ஸி யின் கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் எங்களுடைய அரசியல் விவகாரக்குழு எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமான யுக்திகள் சம்பந்தமான தீர்மானங்களை எடுத்து எங்களுடைய தலைமைப்பீடத்தினுடைய கவனத்திற்கு கொண்டு போக உள்ளது. அத்துடன் நாங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு

பன்னிரு வேங்கைகளின் உருவப்படம் இன்றைய ஈழநாதம்நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## ஆயுதக் கொள்வனவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்!

சிறிலங்கா படையினருக்கு ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கடற்படையினருக்கும், விமானப் படையினருக்கும் போர்க் கப்பல் மற்றும் போர் விமானங்களை உடனடியாகக் கொள்வனவு செய்வதற்கே இந்த அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. கடற்படையினருக்குப் பாரிய போர்க் கப்பலொன்றையும், நீண்ட தூர வீச்சுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை கிராம அ.ச தலைவர் தேசவிரோதிகளால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பிரதேசத்திலுள்ள ஓமடியாமடு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் வண்ணமணி தர்மராஜா (வயது 40) நேற்றிரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு பொலநறுவை மாவட்ட எல்லைக் கிராமமான ஓமடியாமடுவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்துடன் தேச விரோத சக்திகளுக்கு தொடர்பு இருக்கலாம் என அக்கிராம மக்கள் கருதுகின்றார்கள். நேற்று இரவு அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுத பாணிகள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.



## 12 வேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இந்தியா இலங்கை அரசுகளின் கூட்டுச் சதிக்குப் பலியான குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட 12 வேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளில் உணர்வெழுச்சியுடன் இன்று அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று காலை 9.00 மணிக்கு பன்னிரு மாவீரர்களின் நினைவு நிகழ்வுகள் பிரதேச வாரியாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெறவுள்ளன. மாலை 5.05 மணிக்கு பிரதேச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட இடங்களில் பொதுச்சுடர், தேசியக் கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நினைவுரைகள் நடைபெறவுள்ளன. முக்கிய நிகழ்வுகள் வல்வெட்டித்துறை தீருவிலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### ஆட்கள் தேவை

அச்சக வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்பும் பெண்கள் தேவை. கிளிநொச்சி நகருக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு "சக்தி" பதிப்பகம், யாழ் சாலை, கிளிநொச்சி. (5148)

### தவறிவிட்டது

வரணி வடக்கு வரணியைச் சொந்த முகவரியாகக் கொண்ட திருமதி விசாலாட்சி சின்னையா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (கவருடன்) பளைச் சோதனைச்சாவடியினுள் தவறி விட்டது. அடையாள அட்டை இல:(478322860v) இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம், கிளிநொச்சி பணிமனையில் ஒப்படைக்கவும். (10554)

# கால்நடை இறைச்சிப்பாவனைக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பகுதியில் கால்நடைகளுக்கு ஏற்பட்டுவந்த கால்வாய் நோய்த்தாக்கம் காரணமாகக் கடந்த சில மாதங்களின் முன்னர் மனித நுகர்வுத் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த முதலாம் திகதி முதல் நீக்கப்பட்டிருப்பதாகத் தமிழீழ சுகாதார சேவை அறிவித்துள்ளது.

கடந்த சிலமாதங்களின் முன்னர் வன்னிப்பகுதியில் கால்நடைகளுக்கு ஏற்பட்டுவந்த கால்வாய் நோய் தாக்கம் காரணமாக மனித நுகர்வுத் தேவைகளுக்கு கால்நடை இறைச்சிகளைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டது. பின்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கால்நடை வைத்தியப் பகுதியின் நோய்நிலை சிபார்சின்படி கால்நடைகளுக்கான கால்வாய் நோய் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்திருப்பதாக தமிழ் சுகாதார சேவையினருக்கு அறிவித்ததை தொடர்ந்து தமிழீழ சுகாதாரசேவையினரால் இம்மாதம் முதலாம் திகதி முதல் மனித நுகர்வுத் தேவைக்காக மாடுகளை இறைச்சிக்கு வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (லோ,தீ)

# ஆசிரியர் நாள் நிகழ்வுகளைப் புறக்கணிக்க பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் முடிவு

(அலுவலக செய்தியாளர்)

வடக்குக் கிழக்கு மாகாணப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் உலக ஆசிரியர் நாளைப் புறக்கணித்து துக்கநாளாக கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளது. இந்த வகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களின் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் ஆசிரியர்நாள் செயற்பாடுகளைப் புறக்கணித்து இன்றும்நாளையும் எதிர்ப்பைக காட்டவுள்ளனர். இதே வேளை இன்றுமுதல் வடக்குக் கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கொழும்பு இசுறுபாயவில் எதிர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளது. உலக ஆசிரியர் நாளிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இப் போராட்டம் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## வாழ்த்துகிறோம்

இன்று (05.10.2004) ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அன்று தொடக்கம் இன்றுவரை அயராது உழைத்த, உழைத்துக்கொண்டு இருக்கும் ஆசான்கள் அனைவரையும் வாழ்க வாழ்க என வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

பழயமாணவர்சங்கம்
கிளி/கிளிநொசசி மத்திய கல்லூரி.

அனுசரணை:-
துளசி புகைப்படக்கலையகம்
பொற்கடல் கட்டடவாணிபம் (5750)


## சாவு அறிவித்தல்



### வேலு தர்மன்

பூங்காவனம் சந்தி கோரக் கன்கட்டு, பரந்தனைச் சேர்ந்த வேலு தர்மன் அவர்கள் 04.10.2004 நேற்று காலமானார். இவர் பூரணத்தின் அன்புக் கணவரும், செல்வராணி, மகேஸ்வரி, தனராஜ், இராசன் (ராசன் ரயர்கடை, அக்கராயன்), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று 05.10.2004 செவ்வாய்க்கிழமை பி.ப.4.மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை பரந்தன் இந்துமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
மகன் இராசேந்திரன்,
ராசன் ரயர்கடை, ஆஸ்பத்திரிவீதி,
அக்கராயன்.

(4923)

# பாடசாலை, மாவட்ட மட்டங்களில் இன்றும், நாளையும் ஆசிரியர் தினநிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உலக ஆசிரியர் தினம் இன்றும், மாவட்ட மட்டத்தில் நாளையும் கொண்டாடப்படவுள்ளது.

ஆசிரியர்களுக்கு மாணவர்களால் மலர் மாலைஅணிவித்து ஊர்வலமாக பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து வரப்பெற்று அங்கு கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டின் பேரில் நாளை கிளிநொச்சியில் கொண்டாடப்படவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு கிளி. கந்தசாமி கோவிலில் விசேடபூசைகள் இடம் பெற்ற அங்கிருந்து அதிபர், ஆசிரியர்கள் பிரதான வீதிவழியாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கிளிநொச்சி சென்திரோசா ஆலயத்தில வழிபாடு இடம் பெறவுள்ளது வழிபாட்டினையடுத்து மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களுக்கு மலர் மாலை அணிவித்து ஊர்வலமாக கிளி மகாவித்தியாலயத்திற்கு அழைத்து வரப்பெற்று அங்கு வரவேற்பு நிகழ்வுகளும் ,கருத்துரைகளும் பிற்பகல் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் பீட பேராசிரியர் க.சின்னத்தம்பி அவர்கள் முதன்மைவிருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,வவுனியா மாட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஆகியவை இணைந்து நாளை பகல் 10.30 மணிக்கு நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் வவுனியா மாவட்டத்தில் சேவைபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# மாவீரர் நாள் செயற்பாட்டுக்குழு முல்லை மாவட்டத்தில் தெரிவு

மாவீரர் நாள் தொடர்பான சிறப்பு முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் கடந்த 30 ஆம் திகதி அன்று கரைதுறைப்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தமிழீழ நிர்வாகசேவை முல்லை. மாவட்டப் பொறுப்பாளர் முரளி தலைமையில் ஆரம்பமானது.

இதில் மாவீரர் தினம் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை.மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா-சுகுமார், முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன், புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் செ.தயானந்தா, கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் அ.சோதிநாதன், துணுக்காய் உதவி அரச அதிபர் நா.நந்தகுமார், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் ம.ஜெ.கூ ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள்.

தொடர்ந்து மாவட்ட மட்ட மாவீரர் செயற் பாட்டுக் குழுத் தெரிவு செய்யப் பட்டது.

அதில் திரு.சிறிதரன், திரு. செல்வநாயகம், செ.தயானந்தா, திரு.ம.ஜெ.கூ.திரு.நா.நந்தகுமார், திரு.வே.சிவனடியார் ஆகியோர் செயற்பாட்டுக் குழுவாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் சிறப்பு வேலைத்திட்டங்களை ஐந்தாக வகுத்து செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அரச அரசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (20)


## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுத் துண்டுக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316 (சி-10419)


## ஓராண்டு நினைவு...

மண்ணில்
31 - 10 - 1935



விண்ணில்
18 - 09 - 2003

அமரர்

### சின்னையா விநாயகலிங்கம்

(தம்பையப்புலம், அளவெட்டி)

உள்ளங்களை உவக்கவைத்த
உத்தமரே உயர்ந்தவரே!
கண்ணீரைத் துடைத்துங்களைத் தரிசிக்கிறோம்!
இன வன்முறையின் அடிகளைப் பெற்றீர்
தேச விடுதலைக்கும் தேகம் நொந்துழைத்தீர்
கரகாட்டம்செய்தீர் பெண்வேடமிட்டீர்.
கன செம்பு வைத்தாடிச்சபை மகிழ்வித்தீர்.
வாகனம் ஓட்டுவதில் வலுதிறமை காட்டினீர்
குடும்பத்தேவையும் குறைவின்றிச் செய்தீர்
அன்பின் உறைவிடமாய் பண்பின் பிறப்பிடமாய்
விளங்கியெமைக்காத்தீர் வளர்த்தீர்
வணங்குகிறோம், உங்கள் பாதங்களைத்தொட்டு
ஓராண்டு நினைவுப் பூ க்களைச் சொரிகிறோம்.

05.10.2004 இன்று நடைபெறும் மதிய உணவுப் போசனத்தில் உறவினர், நண்பர்கள் மற்றும் போராளிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தற்போதைய முகவரி:-
அம்பாள்குளம், (R.D.S அருகாமை)
கிளிநொச்சி. (5149)

தகவல்:-
குடும்பத்தினர்


## கணனிபயிற்சி நெறி ஆரம்பித்தல்



புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மனிதவள அபிவிருத்தி பிரிவின் கீழ் கணனி பயிற்சி நெறியானது புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனையில் அமைந்துள்ள கணனி பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு கீழ் குறிப்பிடப்படும் தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. க.பொ.த. (சா/த) ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. க.பொ.த.(உ/த)மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

இப்பயிற்சி நெறியை கற்க விருப்பம் உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து மாதாந்தக் கட்டணமாக ரூபா 1250அறவிடப்படும்.

இப்பயிற்சி நெறியின் முடிவில் மனிதவள அபிவிருத்திப் பிரிவால் சான்றிதழ் வழங்கப்படும். ஆகவே மேற்குறித்த கல்வித்தகைமையை உடைய விண்ணப்பதாரிகள் 2004.10.20 ஆம் திகதிக்கு முன்பு தங்களது சுயவிபரங்களுடன் விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முகவரி: அரசாங்க அதிபர்,
மாவட்ட திட்டமிடல் செயலகம்,
கச்சேரி, கிளிநொச்சி.

(சி.10556)

# பாக்தாத்தில் நேற்றும் இரண்டு கார்க்குண்டு வெடிப்பு பத்திற்கும் மேற்பட்டோர் பலி எழுபத்தாறு பேருக்குக் காயம்

(பாக்தாத்தில்)

**ஈராக் தலைநகர் பாத்தாத்தில் இரண்டு பிரதானசாலைகளில் நேற்றுத் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு 76இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**

நேற்று அதிகாலை இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்துள்ளன. முதலாவது கார்க்குண்டு கிறீன்சோன் சாலையில் அமெரிக்கத்தூதுவர் ஆலயத்திற்கு அருகாமையில் வெடித்துள்ளது. மற்றையகுண்டு பாக்தாத்திலுள்ள சனநெருக்கமுள்ள சதாம் வீதியில் வெடித்துள்ளது. இந்த இரு குண்டு வெடிப்புக்களிலும் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர், 76இற்கும் மேற்பட்டோர் காயமடைநதுள்ளனர். அப்பகுதிகளில் அமெரிககப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.



பாக்தாத் சாடோன் வீதியில் மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் காயமடைந்த வெளிநாட்டுச் சாரதி ஒருவர் சிகிச்சைக்காக அப்புறப்படுத்தப்படுகிறார்.

# ஈரானிலிருந்து வாங்கிய கழிவு இரும்பில் வெடிக்காத குண்டுகள் கண்டுபிடிப்பு

## இந்திய அதிகாரிகள் விசாரணை

ஈரான் நாட்டிலிருந்து இந்தியாவின் தனியார் இரும்பு உற்பத்தி நிறுவனம் இறக்குமதி செய்த கழிவு இரும்புப் பொருட்களுடன் வெடிக்காத குண்டுகளும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவற்றை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்வதற்கு இராணுவ அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர். காஸியாபாதைச் சேர்ந்த பூஷண் ஸ்டீல் என்னும் இரும்பு உற்பத்தி நிறுவனம் மும்பையைச் சேர்ந்த "மெற்கோ மார்க்கெட்டிங்" நிறுவனத்தின் மூலம் துபையைச் சேர்ந்த "லக்கிமெற்றல்" நிறுவனத்திடம் இருந்து கழிவு இரும்புப் பொருட்களை இறக்குமதி செய்தது. அந்தக் கழிவு இரும்புப் பொருட்கள் ஈரான் நாட்டில் இருந்து வந்தவை ஆகும். அவற்றில் வெடிக்காத குண்டுகள் இருந்துள்ளன. அதை அறியாத ஊழியர்கள் அதைக்கையாண்ட போது ஒரு குண்டு வெடித்தது 10 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். அதையடுத்து இராணுவத்தைச் சேர்ந்த வெடிகுண்டு நிபுணர்களும், தேசியப் பாதுகாப்புப் படையினரும் கனா உபாவன் என்ற இடத்தில் உள்ள அந்த நிறுவனத்தின் கழிவு இரும்புப் பொருள் கிடங்கிற்குச் சென்று சோதனை நடத்தினர். அதில் பலதரப்பட்ட வெடிக்காத "செல்"குண்டுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் விசாரணைகளும் நடந்து வருகின்றன. கழிவு இரும்புப் பொருட்களை ஏற்றிவந்த பாரஊர்திகள் ஒவ்வொன்றும் அரைக்கிலோ மீற்றர் தூர இடைவெளி விட்டுத் தனித் தனியே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

அக்கழிவு இரும்புப் பொருட்களை மிகக் கவனத்துடன் சோதனையிட வேண்டியுள்ளது. எனவே முழுமையாகச் சோதனை நடத்தி முடிக்க சில நாட்கள் ஆகும் என்று அச் சோதனைப் பணியைக் கண்காணிக்கும் இராணுவ அதிகாரியான மேஜர் சுக்வந்த் சிங் கூறினார். இதற்கிடையே தமக்கு அபாயகரமான கழிவு இரும்புப் பொருளை அனுப்பி வைத்ததற்காக மும்பை மற்றும் துபை நிறுவனங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பூஷண் ஸ்டீல நிறுவனம் அறிவித்துள்ளது.



ஈராக் சமராவில் அமெரிக்க இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# சாகசத்தின்போது விமானம் விபத்தில் சிக்கி வீழ்ந்து நொருங்கியது

(வோஷிங்டன்)

மெக்சிக்கோ நகரிலுள்ள விமானத்தளமொன்றில் விமான சாகச நிகழ்வின்போது எதிர்பாராதவிதமாக விமானமொன்று விபத்துக்குள்ளாகி கீழே விழுந்து நொருங்கி தீப்பிடித்துக் கொண்டது.

இதன்போது விமானி பரிதாபகரமாக உயிரிழந்தார். இந்த விபத்திற்கான காரணம் குறித்து அமெரிக்காவின் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொள்கின்றனர்.

# அமெரிக்க எரிமலை வெடிக்கும் அபாயம்

அமெரிக்காவில் உள்ள செயின்ட் ஹெலன்ஸ் எரிமலை விரைவில் தீக்குழம்புகளைகக்கும் என புவியியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் சியாட்டில் பகுதியின் தெற்கில், செயின்ட் ஹெலன்ஸ் எரிமலை உள்ளது. 1980 ஆம் ஆண்டில் இந்த எரிமலை வெடித்ததில் 200 வீடுகள் தீக்குழம்பால் மூழ்கடிக்கப்பட்டன. 57 பேர் பலியாயினர். 1986 ஆம் ஆண்டு மீண்டும் இந்த எரிமலை வெடித்தது ஆனால், அப்போது பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. தற்போது செயின்ட் ஹெலன்ஸ் பகுதியில் மூன்று முறை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த எரிமலை வெடிக்கும் சூழல் உருவாகியுள்ளதாக, புவியில் வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர். இதன் காரணமாக, இப்பகுதியில் வசிக்கும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.



பூகம்பத்திற்கான அறிகுறிகளைக் காட்டி வரும் சென்ற்-ஹெலென்ஸ் மலையை அவதானிக்கும் பார்வையாளர்கள், சனிக்கிழமை தொடக்கம் மூன்று அபாய அறிவிப்பை இம்மலை காட்டியுள்ளது.

# கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைப்பு பதின் நான்கு ஆண்டுகள் பூர்த்தி

கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைக்கப்பட்டு நேற்று முன்தினத்துடன் 14 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. இதன் போது இவ்வைபவத்தில் உரையாற்றிய ஜேர்மன் நாட்டுத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்; எம்நாட்டு மக்கள் கடின உழைப்பின் மூலமும் ஒற்றுமையின் மூலமுமே நாட்டின் சுபீட்சத்திற்கு வெற்றி காண முடியுமென்று மக்களிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதிக உழைப்பு கல்வியின் நவீன முறைகள் மாநிலங்களின் புதிய நடைமுறைத் திட்டங்கள் என்பவை நாட்டிற்கு அத்தியாவசியம் என்றும் குறிப்பிட்டார்.

# காஸாவில் இஸ்ரேல் இராணுவம் முன்னேறுவதை நிறுத்த வேண்டும்

## -ஐ.நா.பொதுச்செயலர் கொபி அனான் கோரிக்கை

(ஜெருசலேம்)

காஸாப் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் முன்னேறுவதை நிறுத்துமாறு அந்நாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனான் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இஸ்ரேலிய இலக்குகள் மீது பயங்கரவாதிகள் ரொக்கட் தாக்குதல் நடத்தி வருவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பலஸ்தீனத்தையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அப்பாவி மக்களை பாதுகாப்பதில் இருதரப்புக்கும் சட்டப்படியான பொறுப்புக்கள் உள்ளன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் இப் பகுதியில் மோதல்கள் காரணமாக 66 பலஸ்தீனர்களும், 3இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டனர். இதனிடையே இஸ்ரேலியப் பகுதி மீது ரொக்கட் தாக்குதல் நிறுத்தப்படும் வரை பலஸ்தீனத்திற்கெதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

### அ.மெ. வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியது

அமெரிக்க ஆளில்லா உளவு விமானம் ஒன்று பாகிஸ்தானில் விழுந்து நொருங்கயது. அதிஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

பாகிஸ்தானில் அமெரிக்க இராணுவ முகாம்கள் உள்ளன. பாகிஸ்தான் ஜகோ பாபாத் நகரிற்கு தென்பகுதியில் உள்ள அமெரிக்க முகாமக்கு உளவு விமானம் ஒன்று ஆப்கானிஸ்தானில் இருந்து நேற்று முன்தினம் திரும்பிக் கொண்டிருந்தது. ஆளில்லா அந்த விமானத்தில் திடீரென கோளாறு ஏற்பட்டு நிலைதடுமாறி வெட்டவெளியில் விழுந்து நொருங்கியது.



இஸ்ரேலின் மேற்குக்கரை நகரான ஹப்ரோனுக்கு அருகே "பீற்ஆவா" கிராமத்தில் சர்ச்சைக்குரிய இஸ்ரேலின் பாதுகாப்புச் சுவர் கட்டப்படுவதை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரருடன் கைகலப்பில் ஈடுபடும் இஸ்ரேலிய எல்லைக் காவற்படை வீரர்.





'கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை, என்ற தலைப்பில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் கிளி நகரின் பல்வேறு பகுதிகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விளம்பரப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை யுனிசெப், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நீடோ ஆகிய நிறுவனங்கள் இணைந்து அமைத்துவருகின்றன. இவ்வாறான அறிவிப்புப் பலகையொன்றை சர்வதேச சிறுவர் தினத்தன்று தமிழீழ காவல்துறை சீர்திருத்தப் பிரிவு பொறுப்பாளர் நரேன் கிளி.மத்திய விளையாட்டு மைதானம் முன்பாகத் திரைநீக்கம் செய்து வைப்பதனையும், அவ்வாறான மற்றொரு அறிவித்தல் பலகையொன்றையும் படங்களில் காண்க. (படம்:- லோகீசன்,சோதி)

# முழங்காவில் பிரதேச தேவைகள் குறித்து புதிய பிரதேச செயலருடன் கலந்துரையாடல்

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேசத்திற்கான புதிய பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்த குமாருடன் முழங்காவில் பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

பூநகரி-முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் பொ.சிவசாமி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முழங்காவில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ம.அகக்குமரன், பெண்கள் மேம்பாட்டு நிறுவன முழங்காவில் பிரதேசப் பொறுப்பாளர் செல்வி சந்தனா, கடற்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி யான்சி, மாதர் சங்கப் பொறுப்பாளர் செல்வி பாதாம்பரி, பூநகரிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ராசன், வைத்திய கலாநிதி முருகானந்தம் உட்படப்பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முழங்காவில் பிரதேசத்தின் குறைபாடுகள் பற்றியும், முக்கிய தேவைகள் பற்றியும் இதில் கலந்துரையாடப்பட்டது.பூநகரி- முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத் தலைவர்மூ.நவரெட்ணம் நன்றியுரை தெரிவித்தார்.

## திருத்த வேண்டுகை

பூநகரி- பரந்தன் வீதியில் பொறிக்கடவைச் சந்திக்கு அடுத்ததாகவுள்ள குஞ்சுப் பரந்தன் சந்திக்கு அண்மித்த தார் பூசப்பட்டுள்ள பகுதி சீரற்றுக்காணப்படுவதால் பேருந்துகள் செல்லும்போது பேருந்தில் அதிர்வுகள் ஏற்படுகிறது. இதனால் விபத்து ஏற்படும் அபாயமுள்ளது. அத்துடன் இப்பகுதியில் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திச்செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. இதனைத் திருத்தி உதவுமாறு மக்கள் கோருகின்றனர். (34)

# உலக வங்கியின் கிளி.மாவட்டத்திற்கான வீடமைப்புத் திட்டத்தில் பாரிய வெட்டு!

## மீள்குடியமர்ந்தோரை மேலும் அவலத்துக்குள்ளாக்கும் செயல்

(அலுவலக செய்தியாளர்)


**உலக வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவிருந்த வீடமைப்புத்திட்டத்தில் உலக வங்கியால் பாரியவெட்டு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதுகுறித்து அரச அதிபர் கடும் விசனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து மேலும் தெரிய வருகையில்; உலக வங்கியின் நிதியுதவியுடன் 2005 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 6000 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமென ஏற்கனவே தெரிவிக்கப்பெற்றிருந்தது.

அதன் முதற்கட்டமாக 2004ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தநகர்,பூநகரி,பளைப் பகுதிகளில் மொத்தம் நூறு வீடுகள் தற் போது அமைக்கப்பெற்று வருகின்றன. மேற்படி திட்டத்தின் மூலம் மிகுதி 5900 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்குப் பதிலாக 376 வீடுகள் மட்டுமே 2005 ஆம் ஆண்டு அமைத்துக் கொடுக்க முடியுமென உலக வங்கி தெரிவித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

கிளி. மாவட்டத்தில் நடைமுறைப் படுத்துப்படவிருந்த மேற்படி வீட்டுத் திட்டத்தில் பாரிய வெட்டினை உலக வங்கி மேற்கொண்டுள்ளதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த குடும்பங்களில் சுமார் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் இக்குடும்பங்களின் அடிப்படைத்தேவைகள் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. இராணுவ நடவடிக்கைகளால் இவர்களின் இருப்பிடங்கள் உள்ளிட்ட அனைத்துமே அழிக்கப்பட்டுள்ள நிலையில் உலக வங்கி இம் மக்களுக்காக நிர்மாணிக்க முன்வந்திருந்த வீடமைப்புத் திட்டத்தில் பாரிய வெட்டை திடீரென ஏற்படுத்தியிருப்பதானது. பாதிப்புற்றுள்ள இம் மக்களை மேலும் பெரும் அவலத்திற்குள் தள்ளும் செயலாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



புதுக்குடியிருப்பு-மாத்தளன் வீதியில் புதுக்குடியிருப்பு தாய்-சேய் நிலைய வளவில் அமைந்துள்ள கட்டடத்துக்கு அருகில் வடிகால் அமைந்துள்ளதால் (வாய்க்கால்) மேற்படி கட்டடம் காலப் போக்கில் இடிந்து போகும் நிலை ஏற்படலாம். (படம்:- தவரட்ணம்)

## சிரமதானம்

முல்லைத்தீவு -பெரிய புளியங்குளம அ.த.க.பாடசாலையில் நேற்றுமுன் தினம் சிரமதானம் நடைபெற்றது. முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா தலைமையில் பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமளவானோர் சிரமதானங்களில் கலந்து கொண்டனர். (05)

# கூமாங்குளத்தில் குடும்பஸ்தர் வாள் வெட்டினால் படுகாயம்

(வவுனியா செய்தியாளர்)

கூமாங்குளத்தில் சனிக்கிழமை அதிகாலை குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார்.

கூமாங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகரில் உள்ள பால் சேகரிக்கும் நிலையத்திற்கு பால் கொண்டு சென்ற மணியம் (வயது-55)என்ற குடும்பஸ்தரே வாள் வெட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார். இவர் பால் கொண்டு சென்ற போது இவரின் துவிச்சக்கரவண்டியை வழி மறித்த இனந்தெரியாத நபர் இவரை வாளால் வெட்டிவிட்டு மாயமாக மறைந்து விட்டார். இவரின் அபயக் குரலைக் கேட்ட அயலவர்கள் ஓடி வந்து இவரை வாகனத்தில் ஏற்றி உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (10)

# தனபால் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா

பூநகரி -பள்ளிக்குடாவில் கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்டன் தனபால் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா நிகழ்வு காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது.

மங்கல விளக்கை பங்குத் தந்தை லியோ ஆம்ரோங், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத் தலைவர் யோ.பிரான்சிஸ், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.இராசன்ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியைப் பூநகரி முன்பள்ளி மேம்பாட்டுத் தலைவர் த.கிருஷ்ணசாமி ஏற்றினார். தொடர்ந்து பொதுச்சுடரை மாவீரர் காசனின் பெற்றோர் ஏற்றினர்.

அடிக்கல்லை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் துணைப் பொறுப்பாளர் அமுதாப்பும், பங்குத்தந்தையும் மாவட்ட முன்பள்ளிப் பணிப்பாளர் பாண்டியனும் நாட்டினர். சிறப்புரைகளைப் பங்குத்தந்தையும், முன்பள்ளிகளின் பணிப்பாளரும், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரும், பூநகரி முன்பள்ளி மேம்பாட்டுத் தலைவரும் ஆற்றினார். இறுதியில் நன்றியுரையை பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் கிருபன் ஆற்றினார். (34)



'மன்னார் குடும்பநலப் பணியகத்தில் அண்மையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் முரண்பாடுகளுடன் எதிர்நீச்சல் போட நாம் எம்மை பழகிக்கொள்ள வேண்டும்'என்ற தலைப்பில் மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் பேசுகின்றார். அருகில் மாவட்ட ஒன்றியங்களின் இணைப்பாளர் .சி.பீற்றர் இருப்பதைக் காணலாம்.(படம்:-மிராண்டா)

# நீர்ப்பாசனத்துக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் அத்துமீறிக் குடியேறுவோர் அகற்றப்படுவர்

## முல்லை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திட்டங்களுக்காகவும், வாய்க்கால்களுக்காகவும், கலிங்கு நீர் வழிந்தோடுவதற்காகவும் ஒதுக்கப்பட்ட காணிகளை விவசாயிகள் அத்துமீறிப் பிடித்து குடியிருப்புக்களையும், வயல்,தோட்ட நிலங்களையும் அமைத்து வருவது அண்மைக்காலத்தில் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிலை தொடருமாக இருந்தால் இம்மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் தமது நீரேந்துப் பிரதேசத்தை இழந்து காலப்போக்கில் நீர்ப்பாசனத் திட்டங்களே இல்லாமல் போகக் கூடிய அபாயம் ஏற்படலாம்.

எனவே குடியிருப்புக்களையும், வயல்களையும் அமைக்கும் போது குளநீர் கொள்ளக்கூடிய பிரதேசங்களிலும், வாய்கால்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களிலும், கலிங்கு நீர் பாய்ந்து ஓடுவதற்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களிலும் குடியிருப்புக்களையோ, வயல்தோட்டங்களையோ அமைக்கவேண்டாம் எனவும்,ஏற்கனவே அவ்வாறு யாராவது அமைத்திருந்தால் அவர்களை அப்பிரதேசத்தைவிட்டு வெளியேறுமாறும் முல்லை மாவட்டக் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறார். அவ்வாறு செய்யத்தவறின் அவர்களைக் கட்டாயத்தின்பேரில் காணிகளை விட்டு அகற்றநேரிடும் என்று மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறார்.

மேலும் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும்போது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளா? எனப் பார்வையிட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தனது ஆலோசனையைக் கூறியுள்ளார். தவறும் பட்சத்தில் அத்துமீறி ஒதுக்கப்பட்ட நிலங்களைப்பிடிப்போரைக் கட்டுப்படுத்த முடியாது போகலாம். எனவே இவ் விடயத்தில் அதிகாரிகள் பொதுமக்கள், கிராம மட்ட அமைப்புக்கள் இணைந்து செயற்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறார்.(20)

# பெண்கள் ஆற்றல் மிகுந்தவர்களாக வளர்க்கப்பட வேண்டும் - தமிழினி



(யாழ்ப்பாணம்)

**"பெண்கள் அறிவியல் ரீதியாக ஆற்றல் மிகுந்தவர்களாக வளர்க்கப்பட வேண்டும் இளைய தலைமுறையிலிருந்து இந்தச் சிந்தனை கட்டியெழுப்பப்பட வேண்டும்" என மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு இடம்பெற்ற சங்கம நிகழ்வில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2ஆம்லெப் மாலதி நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சிநாளையும் முன்னிட்டுச் சங்கம நிகழ்வு இடம்பெறுவது பெரிதும் வரவேற்கத்தக்கது ஒரு கால கட்டத்தில் பெண்கள் சமூகம் தமது பலத்தைத் தாமே அறியாமல் இருந்து வந்தது. இதற்குக் காரணம் பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று ஒரு கட்டுபாடு எமது சமூகத்தில் இருந்து வந்தது. ஆரம்ப காலத்தில் ஆண்களோடு சேர்ந்து பெண்களும் காடுகளில் வேட்டையாடும்போது அந்தக்குழுக்களுக்குப் பெண்களே தலைமை தாங்கினார்கள். காலமாற்றத்தின் பின்னர் காடுகளில் நெருப்பைப் பெறுவது கடினமான காரியமாக இருந்தது. அப்படியாகப் பெறப்பட்ட நெருப்பைப் பாதுகாப்பதற்காக இருத்திவிட்ட பெண்கள் இன்னமும் அப்படியே இருந்து வருகிறார்கள். இப்படியாகத் தங்கி வாழ்பவர்களாகவும், சமூகத்திற்குச் சுமையாகவும், பெண்கள் உள்ளனர். ஆண்கள் அறிவியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்படும்போது பெண்கள் பலவீனமானவர்களாக வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். இப்படியான பெண்களின் மத்தியிலிருந்து தான் 2ஆம் லெப். மாலதியும் வந்தவள். பெண் போராளிகள் எமது நாட்டைக் காக்கவேண்டும். இதில் ஆண்களுக்கு உரிய சமனான பங்கு எமக்கும் உண்டு. என்றஎமது தலைவனின் அணியில் இணைந்து பயிற்சியை மேற்கொள்ளும்போது பல்வேறு கேள்விகள் எழுந்தன.இவர்கள் எப்படிப் பயிற்சி எடுக்கப்போகிறார்கள்? இவர்கள் எப்படிக் கனரக ஆயுதங்களை இயக்கப்போகிறார்கள்? இவர்கள் எப்படிக் கடலில் நீந்தப்போகிறார்கள்? இவர்கள் எப்படி கடலில் படகுகளை ஓட்டப்போகிறார்கள்? போன்ற பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. ஆனால் இறுதியில் நடந்தது என்ன? பெண்கள் சாதித்தவை ஏராளம். ஆணகளுக்கும், பெண்களுக்கும் நீச்சற் போட்டி வைத்தபோது அதில் வெற்றிபெற்றவர் அங்கையற்கண்ணி. எனவே பழைய விம்பம் உடைக்கப்பட்டு புதிய விஸ்வரூபம் எடுத்து தமிழீழப் பெண்கள் உள்ளனர். ஆனால் இதை எவராலும் ஜீரணிக்க முடியவில்லை. எனவே பெண்கள் அறிவியல் ரீதியாக ஆற்றல் மிகுந்தவர்களாக வளர்க்கப்படவேண்டும். இளைய தலைமுறையிலிருந்து இந்தச் சிந்தனை கட்டியெழுப்பப்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (36)

## உதவக்கோரிக்கை

யாழ்.பருத்தித்துறை துறைமுகத்தை நவீன வசதிகளுடன் கூடிய துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச உதவும் அமைப்புக்களிடமும், தனியார் கம்பனிகளிடமும் உதவி கோரப்பட்டிருக்கிறது. (33)

## வட - கிழக்கு மாகாண தமிழ் இலக்கியவிழா இவ்வாண்டு யாழ்.இல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் இலக்கியவிழா இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் மிகக் கோலாகலமான முறையில் கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைக் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்வுகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும். இதில் இயல், இசை, நாடகம் உள்ளிட்ட தமிழர் கலை பண்பாடுகளைச் சித்திரிக்கும் கலை கலாசார நிகழ்களும், கலாசார ஊர்வலங்களும் இடம்பெறும்.

கடந்தபல வருடங்களுக்குப்பின் யாழ்.மாவட்டக் கல்விச் சமூகத்தினர் மேற்கொண்ட கடின முயற்சியின் பிரகாரம் இம்முறை தமிழ் இலக்கியவிழா யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## சுற்றுச்சூழலைக் கவனத்திற் கொள்ளாது வழங்கப்படும் மதுபான சாலைகளுக்கான அனுமதியை நிறுத்தக் கோரிக்கை

**-மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம்**

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் முறைகேடான விதத்தில் மதுபான சாலைகள் அமைக்கப்படுதல் மற்றும் சுற்றுச்சூழல் அமைவிடங்களின் தன்மையைக் கவனத்தில் கொள்ளாது மதுபான சாலைகளை நடத்துவதற்கான உரிமங்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும் என மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளது சிபாரிசு இன்றி மதுவரித் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தால் யாழ்.குடாநாட்டில் மதுபானசாலைகளை அமைப்பதற்கான அனுமதிப் பத்திரங்களும், உரிமங்களும் நேரடியாகவே வழங்கப்படுகின்றன.

இதனால் மதுபானசாலைகள் அமைக்கப்படக் கூடாத இடங்களான பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், சனசமூக நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் மக்கள் அதிகளவில் கூடும் பொது இடங்களில் எல்லாம் மதுபானசாலைகள் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்படுவதால் பல கலாசாரசீரழிவுகளும், சமூக வன்முறைகளும் இடம்பெறுகின்றன.

எனவே உரிய சூழல் அமைவிடங்களைக் கவனத்தில் கொள்ளாது. மதுவரித் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம் சட்டத்திற்குப் புறம்பாக யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் சிபாரிசுகள் இன்றி மதுவரித்திணைக்களத்தின் தலைமையகத்தால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவது திட்டமிட்டு தமிழர் கலாசாரத்தைச் சீரழிக்கும் நட்வடிக்கையே எனச் சுட்டிக்காட்டி யாழ்.அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (33)

## புத்தூர்ச் சந்திப் பகுதியில் இடியன் துப்பாக்கி மீட்பு

புத்தூர்ச் சந்திக்கு அருகில் உள்ள வாசகசாலைக்கு அண்மித்த பகுதியில் இருந்து இனம் தெரியாத நபர்களினால் விட்டுச்செல்லப்பட்ட இயங்கும் நிலையில் இருந்த இடியன் துப்பாக்கி ஒன்று நேற்று மாலை சிறிலங்காப் பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இத்துப்பாக்கியை எடுப்பதற்கு முப்பதுக்கும் மேற்பட்ட பொலிசார், இராணுவத்தினர் இப்பகுதியில் கூடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மாலை நான்கு மணியில் இருந்து ஐந்து மணி வரை இப்பகுதி பரபரப்பாகக் காணப்பட்டது. (28)

## இலக்கமற்ற மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் நகைத்தொழிலாளி மீது தாக்கு

(யாழ்ப்பாணம்)

நகை வேலை செய்யும் தொழிலாளி ஒருவர் இனந்தெரியாத குழு ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, புத்தூர்ச்சந்தி, தட்டான்குளம் பிள்ளையார் கோயிலுக்கு முன்னாலுள்ள வீட்டில் வைத்து நகை வேலை செய்து வரும் ஒருவரே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வீடு புகுந்து கடுமையாகத் தாக்கப்பட்டார். எனத் தெரிய வருகிறது இலக்கம் இல்லாத உந்துருளிகளில் வந்த ஆறு இளைஞர்கள் இச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)



பெண்களை எழுச்சியடையச் செய்வதற்கான அரங்க நிகழ்வுகளில் ஈடுபட்டு வரும் யாழ். பெண்கள் பண்பாட்டுமைய அணியினரையும் அவற்றை நெறிப்படுத்திவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்களையும் படத்தில் காணலாம். (சசி)

## இருபகுதி மீனவரின் பிரச்சினை குறித்து ஆராய தமிழகம் வருமாறு யாழ். மீனவருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இருபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக மீண்டும் பேச்சுக்களை நடத்துவதற்காக யாழ்.மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளைத் தமிழ் நாட்டிற்கு வருகைதருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டிற்கு 2 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த தென்னிந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இவ் அழைப்பை விடுத்துள்ளனர். தென்னிந்திய மீனவர் சங்கங்களின் சம்மேளனத்தின் கடல்வளம் பேணுதல் பிரிவின் திட்டமுகாமையாளரான பா.சுப்பிரமணியம் மற்றும் அப்பாவி மீனவர்களை விடுதலை செய்வதற்கான கூட்டமைப்பைச் சேர்ந்த சு.அருளானந்தம் ஆகிய இருவருமே வெள்ளிக்கிழமை மாலை வருகை தந்திருந்தனர். கடந்த சனிக்கிழமை காலை வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த அவர்கள் பருத்தித்துறையிலுள்ள வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். சமாசத்தின் தலைவர் தலைமையில் முற்பகல் 11.30இற்கு ஆரம்பமான இப் பேச்சுக்கள் சுமார் 4மணி நேரத்திற்கு மேலாக நீடித்திருந்தது.

இச் சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கஜேந்திரன், சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது உரையாற்றிய தமிழ்நாட்டு மீனவ சங்கப் பிரமுகரான அருளானந்தம்,

இலங்கை-இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை அடுத்து ஓரளவு முன்னேற்றகரமான நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அது முழுமையாக வெற்றிபெற்று விட்டதாக அர்த்தமாகாது. ஒருசில பிரச்சினைகள் முழுமையான தீர்ப்பை எட்டவில்லை என்பதே உண்மை. இறுதியாக சுமுகமான தீர்வொன்றை எட்டுவதற்கு வசதியாக மீனவ சங்கப் பிரதிநிதிகளை தமிழ் நாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம்,

இலங்கை-இந்தியக் கடற்பரப்பினுள் அண்மைக் காலமாக உள்ளூர் மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று இலங்கை அரசு விரும்புகின்றது. இதன் மூலம் ஆண்டாண்டு காலமாக இருதரப்பு மக்களிடையே தொடர்ந்துவரும் உறவுகள் அறுந்து போவதன் மூலம் தனது இலக்குகளை சுமுகமாக வெற்றிகொள்ள முடியும் என்று இலங்கை அரசு நம்புகின்றது. இவ்விடயத்தில் இருதரப்பினருமே விழிப்பாக இருந்துகொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். மேலும் அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் இவ்விடயத்தில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பது தெரியவில்லையெனவும்,

ஆனால் கடந்த 20வருட யுத்தத்தினால் எமது மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அத்துமீறி இலங்கைக் கடற்பகுதிக்குள் வரும் இந்தியக்கடற்படை மீனவர்கள் உள்ளூர் மீனவர்களது உடமைகளைக் கொள்ளையிடுகின்றனர். இதனால் கோபமுற்ற எமது மீனவர்கள் பல தடவைகள் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்டனர். எனினும் எமது உறவுகளே தமிழக மீனவர்கள் எனக் கூறியிருக்கும் விடுதலைப்புலிகள் இத்தாக்குதலைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள் என்பதை இந்திய மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அனிஞ்சியன்குளம் த.க.வித்தியாலயத்திலும் கவனம் செலுத்துக !

மல்லாவி நகரில் பிரதான வீதியின் அருகில் அமைந்த மு/அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம் எதுவித அடிப் படை வசதிகளும் அற்ற நிலையிலேயே இயங்கி வருகின்றது.

இவ்வாறு அப்பாடசாலையின் அதிபர் கு.ஜெகதீஸ்வரன் கவலைதெரிவித்தார். அவர் மேலும் தகவல் தருகையில்; முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் வலயத்தில், துணுக் காய் கோட்டத்தில் இப்பாடசாலை ஓர் ஆரம்பப் பாடசாலையாகும்.

ஆரம்பத்தில் 1-5 வரையான வகுப்புக்களுடன் இயங்கி வந்த



இப்பாடசாலை, 1995 ஆம் ஆண்டு சூரியகதிர் -1 இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்த மாணவர்கள் இப்பாட சால்லயில் கல்வியை தொடர்ந்து மேற்கொண்டு வந்ததால், 1-9 ஆம் ஆண்டு வரையும் தரம் உயர்த்தப்பட்டது. தற்பொழுது 1-9 ஆம் தரம் வரையும் உள்ள இப் பாடசாலையில் அனிஞ்சியன் குளம் 1ஆம் பகுதி, அனிஞ்சியன் குளம் 2ஆம் பகுதி, ஒட்டறுத்த குளம், வடகாடு ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த 270 குடும் பங்களின் 450 பிள்ளைகள் வரை கல்வி கற்கின்றார்கள். 1-9 ஆம் வகுப்பு வரையும் 16 வகுப்பு பிரிவுகளைக் கொண்டு இயங்கும் இப்பாடசாலையில் இருக்கும் ஒரேயொரு நிரந்தரக் கட்டடத்தில் தரம் -1 இயங்குவதுடன், பாட சாலை அலுவலகத்துக்குரிய பொருட்களும் ஏனைய பாட சாலை உபகரணங்களும் வைக் கப்பட்டுள்ளன. உலக உணவுத் திட்டத்தின் கீழ் தரப்படும் உணவுப் பொருட்களையும் அக் கட்டடத்தினுள்ளேயே வைத்து எடுக்கவேண்டிய நிலையும் உள் ளது.யுனிசெப் நிறுவனத்தினால் அமைத்துத் தரப்பட்ட நான்கு தற் காலிக கொட்டகைகளிலும், மரத் திற்குக்கீழும் ஏனைய வகுப் புக்கள் இயங்கிவருகின்றன.

இப்பாடசாலை மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் இவர்கள் தமது திறமையை வளர்ப்பதற்கு கட்டட வச திகளோ, விளையாட்டு மைதான வசதியோ மற்றும் ஏனைய அடிப் படை வசதிகளோ அற்ற நிலை யில் உள்ளனர்.

தற்போது புதிய கட்டடங்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான விண்ணப்பம் கோரப் பட்டு, ஒப்பந்தமும் செய்து பல மாதங்களாகியும் கட்டடங்கள் அமைப்பதாகத் தெரியவில்லை. இனிவரும் மாரி மழையினால் மேற்படி நான்கு தற்காலிக கொட் டகைகளும் பொறிந்து விழும் நிலை ஏற்படலாம் என அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

-க.அன்ரனி-

# பொது மக்கள் சேவைகளைக் கருத்திற்கொள்வோரே தொண்டு நிறுவனங்களுக்குத் தலைமையேற்க வேண்டும்

-கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கருத்து

(அலுவலக செய்தியாளர்)

"மக்களின் சேவைகளைக் கருத்திற்கொண்டு செயற்பெறக் கூடியவர்களையே தொண்டு நிறு வனங்களுக்கு தலைமையேற்பவர்களாகத் தெரிவு



செய்ய மக்கள் முன்வரவேண்டும்." இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட செஞ் சிலுவைச்சங்க புதிய நிர்வாகிகள் தெரிவில் கலந்துகொண்டு கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறு வனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று எமது மாவட் டத்தின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி அயராது உழைக்கக் கூடியவர்களே பொது நிறுவனங்களின் தலைமையைப் பொறுப்பேற்க முன்வரவேண்டும். அவற்றினைத் தெரிவு செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு நிறுவனத்தின் அங்கத்தினர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதனை ஒவ்வொருவரும் உணர்வில் நிறுத்தி செயற்படுத்த முன்வரவேண்டுமென்றார்.

கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்கப் பொதுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில நேற்றுமுன்தினம் தலைவர் கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமைச் செயலகத்தை சேர்ந்த சித்திரவேல், நிர்வாகசேவை நடுவப் பணியகப் பொறுப்பாளர் பகீரதன், கிளி.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன், நிர்வாக உத்தியோகத்தர் ராம்கி ஆகியோர் கலந்து கொண்டனர்.கிளி.வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்ம நாதன் அடங்கிய ஐவர் கொண்ட குழு முன்னி லையில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. தலைவர் இ.கார்த்திகேசு, செயலாளர் க.கணேஸ், பொருளாளர் தி.அபராஜிதன், துணைத்தலைவர் கா.கார்த்திகேசு மற்றும் 6 பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பெற்றனர். (சோ,கு)

# புதுக்குடியிருப்பு சிங்கபுரத்தில் 20 போத்தல் கசிப்பு பிடிபட்டது

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சிங்கபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 20 போத்தல் கசிப்பினை புதுக் குடியிருப்பு காவல் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு காவல் துறையினருக்குக் கிடைத்த தகவ லையடுத்து ஸ்தலத்திற்குச் சென்ற காவல் துறையினரும், புதுக்குடியிருப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் இணைந்து மேற்கொண்ட தேடு தலை அடுத்து 20 போத்தல் கசிப் பினை கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் மீது காவல் துறையினர் சட்ட நடவடிக்கையினை மேற் கொண் டுள்ளனர். (08)

-வவுனியா பொது வைத்தியசாலையில்

# 680 மருத்துவ மாதுக்களுக்கு நியமனக் கடிதம் வழங்கல்

(வவுனியா செய்தியாளர்)

680 மருத்துவ மாதுக் களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளா வைத்தியர் ஏ.கேதீஸ்வரன் தலை மையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சுகாதார அமைச் சின் பணிப்பாளர் காந்தலியனகே வடக்கு, கிழக்கு மாகாண சுகாகார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.எஸ் இரட் நாயக்க,கொழும்பு மத்திய சுகாதார அமைச்சின் வடக்கு, கிழக்குமாகாண ஆலோசகர் ஜெகநாதன் வடக்கு, கிழக்கு சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளா வைத்தியர் ஜெயக்குலராஜா, கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத் தியர் சத்திய மூர்த்தி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங் கினர்.

இவர்களுக்கு நேற்று முன் தினம் முதல் மூன்று மாதகாலம் பயிற்சி வழங்கப்பட்டபின், தாதியர் பயிற்சிக்கல்லூரியில் இணைக்கப்பட்டு அங்கு 18 மாதகாலம் பயிற்சி முடிந்தபின் இவர்கள் அந்தந்த மாவட்டங்களின் கஷ்ரப் பிரதேசங்களில் நியமிக்கப் பட உள்ளனர். (10)

# ஆசிரியர் நடுவப்பணியகம் மன்னாரில் நிர்மாணிப்பு

(மன்னார்)

மன்னாரில் முதன் முதலாக ஆசிரியர் நடுவப்பணியகம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

இப் பணியகம் எதிர்காலத்தில் ஆசிரியரின் சேவைக்காலப் பயிற்சி நெறிகள் வழங்கல், ஒன்றுகூடல் வைபவங்கள் போன்றவற்றை நடத்துவதற்காக வடக்கு, கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீட்டுடன் இந்த வேலை தற்சமயம் துரித மாக நடைபெற்று வருகின்றது. (மி)

# உந்துருளிகளின் அதிவேகமே அநேக விபத்துக்களுக்குக் காரணம்

வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்புப் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்த வீதிவிபத்துக்களில் கூடுத லானவை, உந்துருளிகளில் பயணித்தவர்களின் வேகத்தினா லேயே நடை பெற்றுள்ளன.

இவ்வாறு தமிழீழ காவல் துறையின் வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவுப் பொறுப் பாளர் சி.சிவகுமார் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், கடந்த மாதம் நடைபெற்ற வீதி விபத்துக்களில் 16 விபத் துக்களில் உந்துருளிகள் சம்பந்தப் பட்டுள்ளன. உந்துருளி ஓட்டுனர் களின் கவனயீனத்தினாலும், அதி வேகத்தில் உந்துருளியைச் செலுத்தியதனாலுமே இவ்விபத் துக்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே வேகத்தினைக் குறைத்து வீதி நடைமுறைகளையும், வீதி குறிகாட்டிகளையும் கவனத்தில் கொண்டு உந்துருளிகளைச் செலுத்துமாறு சாரதிகளைக் கேட்டுள்ள அதேவேளை, இனி வரும் காலம் மழைக்கால மாதலால் புனரமைக்கப்பட்ட வீதி களில் வேகமாக வாகனங்க ளைச் செலுத்தினால் அவை தடம் புரள்வதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்காலாம், எனவே வேக எல்லையினை மிகவும் அவதானத் துடன் கடைப்பிடிக்குமாறும் அவர் சாரதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச,லோ)

# இரு குளங்களின் புனரமைப்புக்கான நிதி கண்ணிவெடிகளால் திரும்பும் அபாயம்

-கமக்கார அமைப்புக்கள் கவலை

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பிரதேசத்தில் தச்சடம்பன் பெரிய புளியங்குளம், தச்சடம்பன் முறிகண்டிக் குளம் ஆகிய இருகுளங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி திரும்பிச்செல்லவுள்ளதால் கமக்கார அமைப்புகள் கவலையடைந்துள்ளன.

இக்குளங்களில் மிதிவெடி, பொறிவெடி என்பன உள்ளன. ஓயாத அலை -3இன் மூலம் இப்பகுதிகள் மீட்கப்பட்டு மக்கள் இப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ளனர். ஆனால் இன்றுவரை இப்பகுதிகளில் உள்ள குளங்களில் உள்ள மிதிவெடி, பொறிவெடிகளை அவதானித்து உரிய இடத்திற்கு அறிவிக்கப்பட்டும் இன்றுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே இந்நடவடிக்கைக்குரியோர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கமக்கார அமைப்புக்கள் கேட்டுக்கொள்கின்றன. (05)



மிகவும் குறுகிய காலத்துக்குள் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியான நிலையில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக் கட்டடம். படம்:- தவரட்ணம்



# விளையாட்டு அரங்கு

-ஜெயந்திரன்-



## தூரத்தில் இல்லை இலக்கு

கிளி- உருத்திரபுரம் கிழக்கு சந்திரோதயா விளையாட்டுக்கழகம் பிரதேச மாவீரர்கள் நினைவாக மாவீரர் வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி ஒன்றை மிகவும் சிறப்பான முறையில் நடத்தி நிறைவு கண்டது.

கால்பந்து, கைப்பந்து போட்டிகளாக அமைந்த இச் சுற்றுப் போட்டிகள் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாதவாறு அமைந்திருந்தன.

யாழ். முல்லை, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 22 கால்பந்து அணிகள் கலந்து கொண்ட போட்டி அண்மைக்காலங்களில் நடந்த சுற்றுப்போட்டிகளை போலல்லாது பிரமிக்கத்தக்கதாக அமைந்திருந்தது.

குறிப்பாக அணிகள் காட்டிய திறமை, மதிநுட்பம் ஒழுக்கம் என்பன ஒரு கால்பந்தாட்ட அணி தனது வளர்ச்சியை எவ்வாறு காட்ட முடியும் என்பதற்கு உதாரணமாக அமைந்திருந்தது.




மாவட்டத்தில் முன்னணி அணிகள் என தங்களுக்குள் நப்பாசை கொள்ளும் அணிகள் இச் சுற்றுப் போட்டியில் தோற்கடிக்கப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

'தொடர் தோல்விகள் என்றைக்கோ ஒரு நாள் மகத்தான வெற்றி ஒன்றைத் தேடித்தரும்' என்ற கூற்றுக்கு ஒப்பானதாக இச் சுற்றுப்போட்டி அமைந்திருந்தது.

குறிப்பாக கடந்த பத்து வருடத்திற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னணி அணியாகத் திகழ்ந்த மருதநகர் உதயதாரகை அணியின் வீழ்ச்சிக்கு பின்னரான இளம் வீரர்களைக் கொண்ட புதிய அணியின் உத்வேகம் மற்றும் ஜெயந்தி நகர் பிரெக்ஷன் அணியின் மீள் பிரவேசம் சோலை அணியின் துரித வளர்ச்சி ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியின் பலம் என்பவற்றுக்கு சந்திரோதயா விளையாட்டுக்கழகம் களம் அமைத்துக் கொடுத்ததில் பெருமையடையாமல் இருக்க முடியாது.

மூன்று நாட்கள் மாத்திரமே நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணியும் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

ஆரம்பமே பரபரப்பு விறுவிறுப்பு சம்பியனாகப் போவது எந்த அணி இரு அணிகளிலும் சம பலம் கொண்ட வீரர்கள் ஆனாலும் விக்கினேஸ்வரா அணி அதிக இறுதிப்போட்டிகளை சந்தித்த அணி என்பதால் அதற்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்ற எதிர்வு கூறல்கள் ரசிகர்களிடையே ஏற்படுத்த ஸ்கந்தா அணி ஆட்டத்தின் முதல் பாதியில் கோல் ஒன்றைப் போட்டு வெற்றி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது.



இரண்டாவது பாதி ஆட்டத்தில் விக்கினேஸ்வரா வீரர்களின் திறமையான பந்துப் பரிமாற்றம் மற்றும் நேர்த்தியான ஆட்டம் கோல் எண்ணிக்கையை சமன் செய்ய மேலும் ஒரு கோலை போட்டு விக்கினேஸ்வரா அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் சம்பியனானது.

இதேவேளை கைப்பந்து சுற்றுப்போட்டியையும் சிறப்பாக நடத்தி, பிரதேச கழகங்கள் கால்பந்து போட்டி மாத்திரமல்லாது அனைத்து போட்டிகளையும் நடத்த முன்வர வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக விளங்கியது.

இதனை விட மகளிர் அணியின் காட்சி கால்பந்தாட்டம் காந்தி நிலையச் சிறுவர்களின் கராத்தே கண்காட்சி என்பன ஒரு பெரிய போட்டிகளில் நடைபெறும் ஒழுங்குகளுக்கமைய மினி போட்டியாக அமைந்தமை அனைவரது வரவேற்பையும் பெற்றது.


இவைகள் ஒரு புறமிருக்க சிறந்த அணி,சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், தொடர் நாயகன் விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தது.

இச் சுற்றுப்போட்டி மூலம் ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இலைமறைகாயாக இருக்கும் திறமை கொண்டவீரர்கள் வெளிக்கொணரப் படுகிறார்கள். அவர்களை இனம் காணவும் முடிகின்றது.

எனவே அனைத்துப் பிரதேசக் கழகங்களும் வருடந்தோறும் இது போன்ற சுற்றுப்போட்டிகளை நடத்துவதன் மூலம் திறமை வாய்ந்த ஏராளமான வீரர்கள் இனங்காணப் படுவதுடன் வெகு விரைவில் மாவட்டங்களுக்குரிய அதி உச்சத் திறன் கொண்ட அணியொன்று உருவாகும் என நம்பலாம்.

---

## நவீனத்தின் மகத்துவம்



வேறு விளையாட்டுக்களைப் போல் அல்லாது கிரிக்கெட்டில் நவீன கமரா அறிமுகப்படுத்தப்படுவது அதனை முன்னேற்றுவதற்கான சிறந்த வழியாகும். பந்து வீச்சாளரினால் வீசப்படும் பந்து வழமைக்கு மாறாக விலகிப் போவது அல்லது ஆடுகளம் பழுதாகியிருப்பது போன்றவற்றைப் புதிய கமரா அறியத்தருகிறது.

ஒரு நடுவரோ ஆட்ட வர்னனையாளரோ விரும்பாத போதும் இத்தொழில்நுட்பம் நிலைத்து நிற்கும். இது 2001 ஆம் ஆண்டிலிருந்தே (LBW) விக்கெட் மறைப்புக் குற்றத்தைச் சிறப்பாக திரையில் அவதானிக்க அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தொழில் நுட்பம் மூளை சத்திரசிகிச்சையின் போதும், ஏவுகணை செலுத்தப்பட்ட சுவட்டை அறியவும் பயன்படுத்தப்பட்டது.


இந்தக் கமரா மூலம் பந்து செல்லும் வழி, வீச்சாளரின் கையிலிருந்து விடுபட்ட நேரம் சென்றடையும் இலக்கு என்பவற்றை புகைப்படம் எடுத்து அதனைக் கணினியின் உதவியுடன் அறிவிக்கும்.

அத்துடன் வீசப்படும் பந்து திடீரெனத் திரும்புதல், சுழலுதல், எழும்புதல் என்பவற்றை 99.99வீதம் சரியாக அறிவிக்கும். LB.W முறையில் ஆட்டம் இழப்பதைத் தெளிவாக அறிவிக்கும்.

ஆனால் அதனை மீள் ஒளிபரப்புச் செய்யும்போது நடுவர் மட்டுமே அவதானித்துத் தீர்ப்பளிப்பார். ஆனால் இத்தொழில்நுட்பத்தை யாரும் பயன்படுத்த முடியாது.

இத்தகைய கமரா பந்தின் வேகத்தை அறியக்கூடியதாகவும், அதனை துடுப்பாட்ட வீரர் எதிர்கொள்ளும் நேரத்தையும் அளக்கும்.

இக்கருவி இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் லாபரோ கல்வி நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பந்துவீச்சாளரதும் துடுப்பாட்ட வீரரதும் ஆட்ட நுட்பத்தைப் பதிவு செய்யும்.





---

கடந்த 30.09.2004 தொடக்கம் 3.10.2004 வரையும் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற தேசிய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவன் சகாயரட்ணராஜா-நிரஞ்சன் என்பவர்

## புகழ் தந்தவன்

வெற்றியீட்டி மாவட்டத்திற்குப் புகழைத் தேடிக் கொடுத்துள்ளார்.

முல்லை மாவட்டத்திலிருந்து சுவட்டு நிகழ்வில் பங்குகொண்ட புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவன் சகாயரட்ணராஜா நிரஞ்சன் 400 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும், 800 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். இவர் 800 மீற்றரை ஒரு நிமிடம் 58 வினாடிகளிலும், 400 மீற்றரை 49.45 நொடிகளிலும் ஓடிமுடித்ததுடன், 400 மீற்றரை மிகக்குறைந்த நேரத்தில் ஓடிமுடித்ததற்காக கல்வியமைச்சினால் வழங்கப்படும் நிறச்சாதனைச் சான்றிதழையும் (COLOURS AWARD) பெற்றுக்கொண்டமை முக்கிய விடயமாகும்.



இதேவேளை இவருக்கு வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளது. தொடர் பயிற்சிகள் மூலம் ஏனைய முல்லை மாவட்ட வீரர்களும் இவ்வாறான சாதனைகளை நிலை நாட்டி எமது மண்ணுக்கு சர்வதேச அளவிலும் புகழைத்தேடிக் கொடுக்க முடியும் என முல்லை மாவட்ட விளையாட்டுப் பயிற்சி நிலையப் பயிற்றுவிப்பாளர் ந.முகுந்தன் அவர்கள் தெரிவித்தார்.

(08)

# தேர்தலில் தே.அ.அட்டையை கட்டாயப்படுத்தும் சட்டமூலத்தை ஐ.தே.கட்சி எதிர்க்கின்றது

## -சிறிலங்கா அரச தரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தேர்தலில் ஆள்அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் சட்ட மூலத்துக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி செயற்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.**

கள்ளவாக்குப் போடுவதில் தமக்கிருக்கும் திறமைகளுக்கு இடையூறு ஏற்பட்டுவிடுமென்ற அச்சத்தினாலேயே அக்கட்சி இவ்வாறு செயற்படுவதாகவும் சுதந்திரக் கூட்டணி தெரிவித்துள்ளது.

மக்களின் சனநாயக உரிமையான சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாப்பதே இந்தச் சட்ட மூலத்தின் நோக்கமாகும். ஐக்கிய தேசியக்கட்சி ஆரம்பத்தில் இதற்கு ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் இந்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென்ற அச்சத்தில் தற்போது பலபோலியான சாட்டுக்களை முன்வைத்து வருவதாக அரசு தெரிவித்துள்ளது.

வாக்கெடுப்பில் அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் சர்வஜன வாக்குரிமை பறிபோய்விடுமென்று கருதியிருந்தால் உச்சநீதிமன்றம் இதற்கு அனுமதி வழங்கியிருக்க மாட்டாதென்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி சுட்டிக்காட்டியுள்ளது. இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஒருவருடகாலம் கழிந்த பின்னரே நடைமுறைக்கு வரவுள்ளது. அந்த ஒருவருட காலப்பகுதியில் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. தேவைப்படும் வசதிகளை வழங்கினால் ஆறுமாத காலத்தினுள் அடையாள அட்டை இல்லாத அனைவருக்கும் அவற்றை வழங்க முடியுமென்று ஆட்பதிவு ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தப்பணிகளைக் கண்காணிக்கும் பொறுப்பிற்காக அனைத்துக்கட்சிகளின் உடன்பாடுடன் குழுவொன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இத்தகைய நிலையில் அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் சர்வஜனவாக்குரிமை பறிபோய்விடுமென்று ஐக்கிய தேசியக்கட்சி கூறிவருவது ஒரு வேடிக்கையான விடயம் என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

தேர்தலில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் சட்டமூலம் தொடர்பாக எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

தேர்தலில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்துமாறு மக்கள் அமைப்புக்களும், தேர்தல் அதிகாரிகளும் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே இது எடுக்கப்பட்டது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

## -ஊழல்கள் மோசடிகள் குறித்து-

# அமைச்சர்கள்-பிரதிஅமைச்சர்கள் பரஸ்பரம் சனாதிபதிக்கு முறையீடு

அரசாங்க அமைச்சர்கள் சிலருக்கும், பிரதி அமைச்சர்கள் சிலருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. அமைச்சர்கள் சிலர் மீது வீணான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வரும் இரண்டு பிரதி அமைச்சர்கள் மேற்கொண்டதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாகத் தாம் சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாக அமைச்சர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட பிரதி அமைச்சர்கள் இருவரும் அமைச்சர்களின் மீது குற்றங்களைச் சுமத்தி, தமது குற்றங்களை மறைக்க முயல்வதாக அமைச்சர்கள் கூறுகின்றனர். இவர்கள் தொடர்பான குற்றச்சாட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது, அது நேற்றைய தினம் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## வெளியேற்றத்திட்டம்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் 62 ஆயிரம்வறிய குடும்பங்களைக் கொழும்பு நகரில் இருந்து வெளியேற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை சிரேஷ்ட உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது. இவர்களுக்குப்பிலியந்தல, ஹோமாகம, வத்தளை, கடவத்த, கம்பகா போன்ற இடங்களில் மாடி வீடுகள்அமைத்து இவர்களை அங்கு குடியேற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

# வட-கிழக்கு மாகாண சபையின் கீழான சாரதிகளுக்குப் பதவி உயர்வு

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் அமைப்புக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் மாகாண சபையைச் சேர்ந்த சாரதிகளுக்குப் பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாரதி தரத்தில் 8 வருட திருப்திகரமான சேவையையும், 05 வருடங்கள் தொடர்ச்சியான சம்பள ஏற்றத்தையும் பெற்றுள்ள சாரதிகளுக்கே இந்தப் பதவியுயர்வு வழங்கப்படவுள்ளது.

குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சாரதிகளுக்குப் பதவியுயர்வு வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இரு கட்சித்தலைவர்களும் வாக்களிக்க முடியா அவலம்!

(கொழும்பு)

வாக்களிப்புக்கு இனிமேல் தேசிய அடையாள அட்டை அவசியமென்ற சட்ட மூலம் அமுலுக்கு வரும் பட்சத்தில் குறைந்தது இரு முக்கிய கட்சிகளின் தலைவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட முடியாத நிலை ஏற்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண எல்லாவெல மேதானந்த தேர ருக்குமே இவ்வாறு வாக்களிக்க முடியாத நிலை ஏற்படும். தனதுதேசிய அடையாள அட்டை பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதாகவும், இதனைப் புதுப்பித்தே பயன்படுத்த முடியுமெனவும் ரணில் கூறியுள்ளார்.

இதேவேளை வண.எல்லாவெல மேதானந்த தேரரிடம் அடையாள அட்டை இல்லை. 1987-1989 காலப்பகுதியில் தென்பகுதி எங்கும் ஜே.வி.பி யினரால் அடையாளஅட்டைகள் பெருமளவில் பறிமுதல் செய்யப்பட்ட போது இவரதுஅடையாளஅட்டையும் பறிக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது.

# யூரியா உரத்திற்குத் தட்டுப்பாடு இல்லை சனவரி மாதம் வரை கையிருப்பு உள்ளது

## - விவசாய அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் யூரியா உரத்திற்குத் தட்டுப்பாடு இல்லையென சிறிலங்காவின் விவசாய, கால்நடை காணி அமைச்சர் அநுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

யூரியா உரத்திற்கு தட்டுப்பாடு சந்தையில் இல்லையெனத் தெரிவித்த அவர், அடுத்த ஆண்டு சனவரி மாதம் வரை போதுமான உரம் இருப்பில் உள்ளது எனவும் கூறியுள்ளார்.

"நாட்டின் வருடாந்த யூரியா உரத்தேவை 150,000 மெற்றிக் தொன்கள் ஆகும். 60,000 மெற்றிக் தொன் உரம் தற்போதைய சந்தையில் உள்ளது. உரக்கூட்டுத்தாபனம் 24000 மெற்றிக் தொன் உரத்தையும், தனியார் துறை 16,000 மெற்றிக் தொன் உரத்தையும் வரவழைத்துள்ளன. மொத்தமாக ஒரு இலட்சம் மெற்றிக் தொன் உரம் சந்தையில் உள்ளது.

இத் தொகை அடுத்த மூன்று மாதங்களுக்குள் எழும் உரத்திற்கான கேள்விக்கு போதுமானதாகும்." என்றும் தெரிவித்த அமைச்சர்,தற்போதைய உரச்சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளதாகவும் பாராளுமன்றத்தில் அச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 2000 பேருந்துகள் கொள்வனவு

(கொழும்பு)

சிறிலங்கா போக்குவரத்துச் சபைக்கு மேலும் 2000 புதிய பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த வருட இறுதிக்குள் இந்தப் பேருந்துகள் கொள்வனவு செய்யப்படும் என்றும், இதன்மூலம் சிறிலங்கா போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகள் முன்னேற்றமடையும் என்றும் போக்குவரத்து அமைச்சர் பிலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.இதேவேளை மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளைத் திருத்துவதற்கு 150 மில்லியன் ரூபாவை சனாதிபதி ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (32)

# நிலத்தைக் கொத்திய வேளை குண்டு வெடித்தது!

## -பதுளையில் இளைஞன் பலி

பதுளை மாவட்டம் ஊவா பரனகமவிலுள்ள தோட்டமொன்றில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் தோட்டப்பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கொல்லப்பட்டவர் கேபாலன் விமலானந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்த கே.ஆனந்தகுமார் என்பவர் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பயிர்ச்செய்கைக்காக நிலத்தை மண்வெட்டியால் கொத்திபண்படுத்திக் கொண்டிருந்த சமயம் நிலத்தில்புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள் ஒன்று வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக வெலிமட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்பள உயர்வு கோரி தொழிலாளர்கள் பேரணி

மலையகத் தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு உட்பட இரு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் ஹற்றன் நகரில் நடைபெற்ற பேரணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பெ. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பற்றி தோட்ட நிர்வாகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது அனைத்துத் தொழிற்சங்கங்களுக்கும் இடமளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இதில் முன்வைக்கப்பட்டுள்ளது. மல்லிகைப் பூ சந்தியிலிருந்து பஸ் நிலையம் வரை நடைபெற்ற இந்தப் பேரணியில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பினார்கள்.

# பயிசர் முஸ்தபாவிற்கு பிரதி அமைச்சர் பதவி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பயிசர் முஸ்தபாவுக்கு எதிர்வரும் கிழமைகளில் கைத்தொழில் ஏற்றுமதிப் பிரதி அமைச்சர் பதவி வழங்குவதற்கு சனாதிபதி தீர்மானம் எடுத்துள்ளார். அரசாங்கத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கியதால் இந்த நியமனத்தை அவருக்கு வழங்குவதாக சனாதிபதி கூறியுள்ளார்.

# வேலைவாய்ப்பு வழங்க நிர்ப்பந்தம்

அரசாங்கம் வாக்குறுதி வழங்கியபடி மூவாயிரம் தோட்டப்பகுதி இளைஞர்,யுவதிகளுக்கு அரசாங்க வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் முன்னணியின் உப தலைவர் கணபதி கனகராஜ் சனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் மலையக மக்களுக்கென பல வாக்குறுதிகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வழங்கியது. இதன் அடிப்படையில் கடந்த இரண்டு மாதங்களாக நேர்முகப் பரீட்சைகளும் நடத்தப்பட்டன. எனினும் 30ஆயிரம் பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்குக் காட்டிய முனைப்பை அரசாங்கம் மலையக தோட்டப்புற இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக்களில் காட்டவில்லை என கணபதி கனகராஜ் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.


# பணிநிலை வெற்றிடம்

**கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்.**

01. பதவி : சாரதி
02. சம்பள குறியீட்டு இலக்கம்: 312/15
03. சம்பள அளவுத்திட்டம் : (3500 +1250) 4750-65x10-70x10 = 6100/=
04. வயதெல்லை : 21-45
05. தகைமைகள் : ஐந்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் பஸ் அல்லது லொறி அல்லது நான்கு சில்லு உழவு இயந்திரம் பெட்டியுடனான சாரதி அனுமதிப் பத்திரத்துடன் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 15.10.2004 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ, நேரடியாகவோ தலைவர், கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

(சி.10249)

# தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்த எட்டுத் தீவிரவாதிகள் பொலிசாரால் கைது

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக அறிவிப்பு

(சென்னை)

**தமிழகத்தின் நெய்வேலி, கடலூர் மாவட்டங்களில் தீவிர தேடுதலை நடத்திய பொலிசார் தமிழர் விடுதலைப்படையைச் சேர்ந்த எட்டு தீவிரவாதிகளைக் கைதுசெய்துள்ளதோடு அவர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசி மோட்டார் சைக்கிள், அரிவாள் போன்றனவற்றைக் கைப்பற்றியுள்ளதாக தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.**

தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதிகள் பிடிக்கப் பட்டனர். கடலூர் மாவட்டத்தில் பொலிஸ் எஸ்.பி பிறேம்குமார் திடீரென நெய்வேலியில் உள்ள அனைத்து விடுதிகளையும் சோதனையிட உத்தரவிட்டார். அவரது உத்தரவின் பெயரில் நெய்வேலி டி.எஸ்.பி பெருமாள் தலைமையியல் பொலிஸ் அதிகாரி சங்கரேஸ்வரன் உதவிப் பொலிஸ் அதிகாரி சந்திரகேரன் ஆகியோர் நெய்வேலியில் உள்ள பல்வேறு விடுதிகளில் அதிரடிச் சோதனை மேற்கொண்டனர். அப்போது வர்த்தக நிலைய வளாகத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான 3பேர் தங்கிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பொலிசாரைக் கண்டதும் மூன்று பேரும் தப்பித்துச்செல்ல முயற்சி செய்தனர். அப்போது பொலிசார் அவர்களைச் சுற்றிவளைத்துப் பிடித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்போது அவர்களிடம்இருந்து வீச்சரிவாள் போன்ற ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டன. மேலும் அவர்களிடம் மூன்று செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் அவர்கள் அனைவரும் தமிழ்நாடு விடுதலைப் படைஅமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் நெய்வேலியில் பல்வேறு இடங்களில் கொள்ளையடித்ததும் தெரியவந்தது.

மேலும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தீவிரவாதிகளின் ஊடுருவல் இருப்பதாகக் கிடைத்த தகவலையொட்டி எஸ்.பி. பிறேம்குமார் அனைத்து இடங்களிலும் வாகன சோதனையிடவும் உத்தரவிட்டிருந்தார். இதனையொட்டி நேற்று முன்தினம் காலை டி.எஸ்.பி பெருமாள் தலைமையில் வாகன சோதனையிலீடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான 3 வாலிபர்கள் மோட்டார் சைக்கிளை வேக மாக ஓட்டி வந்தனர். அவர்கள் வந்த வாகனம் ஒன்றின் பதிவு எண் உருது மொழியில் எழுதப் பட்டிருந்தது. பொலிசாருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியதால் அவர்களைப் பிடிக்க முற்பட்ட போது அவர்கள் தப்பியோட முயற்சித்தனர். அவர்களை மடக்கிப்பிடித்த பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். விசாரணையின் போது இந்த 3 பேரும் தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்தது. மேலும் நேற்று முன்தினம் இரவு கடலூர் புதுநகர் பொலிசார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது கடலூர்மஞ்சள் குப்பம் பதிவாளர் அலுவலகம் முன் சந்தேகத்திற்கிடமான வகையில் நின்றுகொண்டிருந்த 2 பேரையும் மடக்கிப் பிடித்தனர். விசாரணையில் அவர்கள் தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்த வர்த்தகர் என்று தெரியவந்தது. அவர்கள் வைத்திருந்த பயங்கர ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டது என தமிழகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## 6 பேர் பலி

அசாம் மாநிலத்தில் நேற்று தொழிலதிபர் ஒருவரின் வீட்டிற்குள் புகுந்த பொடோ தீவிரவாதிகள் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஆறுபேர் உயிரிழந்துள்ளனர். எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர்.



தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார்சைக்கிளுடன் தமிழகபொலிசார்.

# வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதத்தை ஒடுக்க மத்திய-மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை எடுக்கும்

## - உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவிப்பு

வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதத்தைத் கட்டுப்படுத்த மத்திய -மாநில அரசுகள் இணைந்து ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று இந்திய உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் தெரிவித்தார். இதன்படி மத்திய மாநில அரசுகளுக்கு இடையே பாலமாக செயற்பட ஒரு அதிகாரி நியமிக்கப்படவுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனிமேல் அசாம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்க மாநிலம் அசாம், நாகலாந்து முழுவதும் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டிருக்கின்றனர். மேற்கு வங்க அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலத்தில் பாதுகாப்பை பல மடங்கு அதிகரித்துள்ளது. மேற்கு வங்காளத்திலும் அசாம், நாகலந்து அருணாச்சலப் பிரதேசம் மணிப்பூர், மேகாலயம், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங்களிலும் உசார் நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. வங்கதேசத்தை ஒட்டியுள்ள அந்த மாநிலங்களின் எல்லைப்புறப் பகுதிகள் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்க தீவிர கண்காணிப்புக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை அசாமில் 10 இடங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர் இதில 4 இராணுவ வீரர்கள், பொது மக்கள் 4 பேர் உட்பட 11 பேர் இறந்தனர் 50இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அசாமிலும் நாகாலந்திலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பயங்கரவாதிகள் நடத்திய தொடர் வெடிகுண்டுத் தாக்குதலில் இறந்தோர் எண்ணிக்கை 88 ஆக உயர்ந்து விட்டது.



அசாம் மாநிலக் குண்டுவெடிப்பில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதையும், இந்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் அதிகாரிகள் சகிதம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டபின் பத்திரிகையாளருக்கு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# டுபாயில் தொழில்நுட்பக் கண்காட்சி 50 இந்திய நிறுவனங்கள் பங்கேற்பு

(டுபாய்)

டுபாயில் நடக்கும் 'ஜிடெக்ஸ்' 2004 தகவல் தொழில்நுட்பக் கண்காட்சியில் இந்தியாவைச் சேர்ந்த 50 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பங்கேற்கின்றன. டுபாயில் 'ஜிடெக்ஸ்' (கல்ப் இன்பர்மேஷன் ரெக்னோலஜி எக்சிபிஷன்) என்ற தகவல் தொழில்நுட்பக் கண்காட்சி நடக்கிறது. இதுமத்திய கிழக்கு நாடுகளில் மிகமுக்கியமான தகவல் தொழில்நுட்பக்கண்காட்சியாகக் கருதப்படுகின்றது. டுபாயிலுள்ள உலக தகவல் மையத்தில் நடக்கும் இந்தக்கண்காட்சியில் இரண்டாயிரத்து 428 நிறுவனங்கள் பங்கேற்கின்றன. கடந்த ஆண்டு நடந்த கண்காட்சியில் மொத்தம் 80 ஆயிரம் பார்வையாளர்கள் பங்கேற்றனர். ரூபா.50 கோடிக்கும் அதிகமாக வர்த்தகம் நடைபெற்றது. நேற்று முன்தினம் தொடங்கிய இந்தக்கண்காட்சியில் இந்தியாவைச் சேர்ந்த 50 நிறுவனங்கள் பங்கேற்கின்றனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டை விட 20சதவீதம் அதிகம். எலெக்ரொனிக் மற்றும் கம்பியூட்டர் வொப்ற்வெயா ஏற்றுமதி வளர்ச்சிக் கவுன்சில் தலைமையில் இந்திய நிறுவனங்கள் பங்கேற்கின்றன. கண்காட்சியில் பங்கேற்கும் இந்திய நிறுவனங்கள் அரபு மொழி சார்ந்த சொப்வெயர்களுடன் அரபிய மொழி சார்ந்த சேவைத்திட்டங்களுடனும் கண்காட்சியில் பங்கேற்கின்றனர். இதன் மூலம் வளைகுடாநாடுகளிலும், மிகப்பெரிய வர்த்தகத்தைப் பிடிக்கமுடியும் என்று கொம்பியூட்டர் சொவ்ற்வெயா ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தின் ஐக்கிய அரபு எமிட்டுக்கான மண்டல இயக்குனர் கமல்வாசனி நிருபர்களிடம் கூறினார்.

# மெல்போனில் தியாக தீபகலை மாலை

ஒக்டோபர் 2 ஆம் நாள் சனிக்கிழமை மெல்போன் நகரில் தியாக தீபகலை மாலை நிகழ்ச்சி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் லெப்ரினன்ட் கேணல் குமரப்பா,லெப்ரினன்ட் கேணல் புலேந்திரன் உப்பட்ட பன்னிரு வேங்கைகளினதும்,களப்பலியான முதல் பெண் புலி 2 ஆம் லெப். மாலதி, உண்ணா நோன்பிருந்து மரணித்த தீயாகி திலீபன் மற்றும் வான்படை தந்த மாவீரர் கேணல் சங்கர் ஆகியோரின் நினைவாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். தாயக விடுதலைப் போரில் மரணித்த மாவீரர்கள், பொதுமக்களுக்கு அகவணக்கம் செலுத்தி நிகழ்வு ஆரம்பமானது. மாவீரர்களின் திருவுரு வப்படங்களிற்கு வந்திருந்த அனைத்து மக்களும் மலர் அஞ்சலி செலுத்தினர்.


தொடர்ந்து கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. மெல்போன் " நடனாலயா" மாணவிகளின் நடனங்கள், சிறப்புரைகள், கலைபண்பாட்டுக்கழகத் தயாரிப்பில் உருவான " அகமும் புறமும் " நாடகம் போன்றன அரங் கேறின. அத்துடன் நினைவு கூரப்பட்ட மாவீர்களின் நினைவு சுமந்த வீடியோ விவரணப்படங்களும் காண்பிக்கப்பட்டது.





# முழுப் பலத்துடன் கூடிய இந்திய அணியை எதிர்கொள்ளவே நாம் விரும்புகின்றோம்

## அடம் கில்கிறிஸ்ட்



பெங்களூர் டெஸ்டில் நாங்கள் வெற்றி பெறப்போவது உறுதி. அந்த வெற்றி பெருமைக்குரிய வெற்றியாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம். அதற்கு இந்திய அணி முழுப் பலத்துடன் கூடிய அணியாக எங்களை சந்திக்க வேண்டும். டெண்டுல்கர் விளையாடினால்தான் அது சரியாக இருக்கும் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

எங்கள் அணி வீரர்கள் ஒவ்வொருவரும் டெண்டுல்கரை களத்தில் சந்திக்க ஆசையாக உள்ளோம். சிறந்த போட்டியாக பெங்களூர் டெஸ்ட் அமைய வேண்டும் என்றால் அதில் டெண்டுல்கர் இருக்க வேண்டும். நான் பார்த்ததில் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் என்பதில் சந்தேகமே இல்லை. ஒருவேளை டெண்டுல்கர் விளையாடவில்லை என்றாலும் கூட இந்திய அணியை லேசாக எடைபோட்டுவிட நான் தயாராக இல்லை. இந்திய வீரர்களுக்கு இது உள்ளூர் போட்டிகள் என்பதால் இந்த சூழ்நிலை அவர்களுக்கு சாதகமாக அமைய வாய்ப்பு உண்டு. கடந்த 35 ஆண்டுகளில் இந்தியாவில் நாங்கள் எப்போதுமே ஒரு தொடரைக்கூட வென்றதில்லை. எனவே, இந்தத் தொடரில் முடிவு எதுவாக இருந்தாலும் நாங்கள் இழப்பதற்கு ஒன்றும் இல்லை. ஹர்பஜன்சிங், கும்ளே போன்ற சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் இந்திய அணியில் இருப்பதால் சில சிரமங்களை எங்கள் அணி சந்திக்க வேண்டியிருக்கும் என்றார்.

அவுஸ்திரேலியாவின் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் நேற்று முன்தினம் பெங்களூரில் நிருபர்களிடம் பேசும்போது, பெங்களூர் டெஸ்ட் போட்டி அநேகமாக துடுப்பாட்ட வீரர்களுக்கும், சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் இடையே நடக்கும் பலப்பரீட்சையாகவே அமையும் எனக் கருதுகிறேன். எனவே, எங்களுடைய துடுப்பாட்ட வீரர்கள், இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் ஹர்பஜன்சிங், கும்ளே ஆகியோரிடம் கவனமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# இந்திய பந்து வீச்சாளர்களில் இர்பான் பதான் அச்சுறுத்தல் மிக்கவர் - ஷேன் வோர்ன்



இந்திய வீரர்களில் இர்பான் பதான் சிறப்பாகப் பந்து வீசுகிறார் என்று அவுஸ்திரேலிய சுழற்பந்து வீரர் ஷேன் வோர்ன் கூறினார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் வந்துள்ளோம். இம்முறை துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடுவர். இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் ஹர்பஜன், அனில் கும்ளே ஆகியோர் மீது எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் ஆதிக்கம் செலுத்துவர்.

சுழற்பந்து வீச்சாளர்களுக்கும், துடுப்பாட்ட வீரர்களுக்கும் இடையே நடைபெறும் பெரிய போட்டியாக இது இருக்கும்.

இந்தியப் பந்து வீச்சாளர்களில் இர்பான் பதான் அபாரமான பந்து வீச்சாளர். அவரைச சமாளிப்பது அவுஸ்திரேலிய துவக்க ஆட்டக்காரர்களுக்குக் கடினமாக இருக்கும்.

எங்கள் தலைவர் ரிக்கி பொண்டிங் அணியில் இல்லாதது மிகப்பெரிய இழப்பு. அணியில் ஐந்து புதுமுகவீரர்கள் இடம்பெற்றிருந்தாலும் பிரச்சினை இல்லை.

முதல் டெஸ்ட் போட்டியில் சச்சின் விளையாடுவார் என்ற நம்பிக்கை உள்ளது. அவருடன் நேற்று நான் பேசினேன். 4 டெஸ்ட் போட்டிகளிலும் அவர் விளையாடுவார் என்று நான் நினைக்கிறேன். மைதானத்திற்கு வெளியே நாங்கள் நல்ல நண்பர்கள். ஆனால், களத்தில் இறங்கிவிட்டால் அவரை ஆட்டமிழக்கச் செய்ய கடும் முயற்சி செய்வேன் என்றார் அவர்.

## பாக்டெல் முக்கோண ஒரு நாள் போட்டி


## சிறிலங்காவை எதிர் கொள்கிறது பாக்.

பாக்டெல் முக்கோண ஒருநாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டி நாளை நடைபெறுகின்றது. இதில் சிறிலங்கா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா கிரிக்கெட் அணி நேற்று பாகிஸ்தான் சென்றடைந்தது.

ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள பாகிஸ்தான் அணி இப் போட்டியிலும் வெற்றி பெறும் உற்சாகத்தில் உள்ளது.

# டெஸ்ட் போட்டியில் யுவராஜ்சிங் தொடக்க வீரராக ஆடவேண்டும்



உலக சம்பியனான அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தொடக்க வீரராக யார் ஆடுவது என்ற சர்ச்சை இருந்து வருகிறது. ஷேவாக்குடன், ஆகாஷ் சோப்ரா தொடக்க வீரராக ஆடுவார் என்று இந்திய கிரிக்கெட்சபை செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் டெஸ்ட் போட்டியில் யுவராஜ்சிங் தொடக்க வீரராக ஆடவேண்டும் என்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத் விருப்பம் தெரிவித்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மாற்றம் தேவை. ஒரு ஓவருக்கு 4 ஓட்டங்கள் எடுப்பதுதான் தற்போது சிறந்தது. இதனால் யுவராஜ்சிங்கை தொடக்க வீரராக களம் இறக்குவது நல்லது. வீரேந்தர் ஷேவாக்குடன் அவர் தொடக்க வீரராக ஆடினால் ஓட்டங்களைக் குவிக்க முடியும்.


சமீப காலமாக ஷேவாக் ஒரு நாள் போட்டியில் சரியாக ஆடாததால் அவர் மீது விமர்சனம் எழுந்துள்ளது. இது தேவையற்றது. அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் தொடரில் அவர் சிறப்பாக ஆடியிருக்கிறார். இந்தத் தொடரிலும் அபாரமாக ஆடுவார் என்றார்.

# பாக். வேகப்பந்து வீச்சாளர் சபீர்அகமட் இரு வாரங்களில் அணிக்குத் திரும்புகிறார்


பாகிஸ்தானிய வேகப்பந்து வீச்சாளரான சபிர் அகமட் இன்னும் இரு வாரங்களில் அணிக்குத் திரும்புவதாக தெரிவித்துள்ளார்.

சபிர் அகமட் ஐ.சி.சி மினி உலகக்கிண்ண கிரிக்கட்டின் போது காயமடைந்து தென்னாபிரிக்காவில் சிகிச்சை பெற்று வருகிறார். அவன் பாகிஸ்தானில் நடைபெறும் முக்கோணப் போட்டிகளில் விளையாட முடியாது என தெரிவித்துள்ளார்.

எனினும் இம் மாதம் 20 ஆம் திகதி தொடங்கும் சிறுவர்களுடனான டெஸ்ட் போட்டிகளுக்கு அவர் பூரண உடல் தகுதி பெற வேண்டும் எவ்வாறெனினும் அவர் விரைவில் அணிக்குத் திரும்புவார் என தெரிவிக்கப்படுகிறது.




நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற அரை மரதன் மகளிர் பிரிவில் முதன் முதலாக எல்லைக் கோட்டை கடக்கின்றார் சீனாவின் யிஞ்சீசன். (வலது) டில்லி இந்தியா கோட்டை தாண்டி ஓடும் வீரர்கள். முதலில் ஓடும் கென்ய வீரர் பால் கிரூயி-யே பட்டத்தையும் வென்றார்.



கொரிய ஓபன் போட்டியில் வாகை சூடியதற்காக வழங்கப்பட்ட கோப்பையை முத்தமிட்டு மகிழ்கிறார் விம்பிள்டன் சாம்பியனும் ரஷ்யாவைச் சேர்ந்தவருமான மரிய ஷரபோவா.

# கிம் கிளிஸ்டர்சுக்கு மீண்டும் காயம் இவ்வருடப் போட்டிகளில் இருந்து விலகினார்



பெல்ஜிய நாட்டின் டென்னிஸ் வீராங்கனைகிம்கிளிஸ்டர்ஸ் இந்த ஆண்டுக்கான இனிவரும் போட்டிகளில் விளையாட முடியாத நிலை தோன்றியிருப்பதாக தெரிய வருகிறது. அதற்கான காரணம் அவரின் இடது கை மணிக்கட்டில் ஏற்பட்டுள்ள காயமாகும்.


கடந்த சனியன்று அவருக்கு பலத்த காயம் எதுவும் ஏற்படவில்லை என பெல்ஜிய ஓபன் டென்னிஸ் கழகம் தெரிவித்துள்ள போதிலும் நேற்று அவரது கள வைத்தியர் அதனை மறுத்துள்ளார். அத்துடன் சில வேளை அவர் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை தோன்றலாம் என்றும் வைத்தியர் புருனோ வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் போது அவர் காயமடைந்தார்.அப்போது எலினா போவினாவுக்கு எதிராக 4-6, 2-2 என்ற செட்டில் ஓய்வு பெற்றார்.

முன்னைய காயங்கள் குணப்படுத்தப்பட்டிருப்பினும் இப்போது ஏற்பட்டுள்ள காயம் அவரின் புகழுக்கு தாமதம் அளிக்கும்

இவ்வாரம் அவருக்கு பல வைத்திய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதாக அவரது வெப் தள செய்திகள் தெரிவிக்கின்றன.

# பட்டம் வென்ற பெடரர் புதிய உலக சாதனையும் படைத்தார்



உலகின் முதல்நிலை ஆட்டக்காரரும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவருமான ரோஜர் பெடரர் தாய்லாந்து ஓபன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இந்த ஆண்டில் அவர் வெல்லும் 10 ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பாங்கொக்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் பெடரர் 6-4,6-0 என்ற நேர் செட்களில் அமெரிக்க வீரர் ஆண்டி ரொடிக்கை எளிதில் வென்றார்.

இந்தச் சீசனில் மட்டும் ரொடிக்கை 3 முறை வென்றுள்ளார் பெடரர். இவ் வெற்றி மூலம் டென்னிஸ் வரலாற்றில் புதிய சாதனையும் படைத்துள்ளார் பெடரர்.

அதாவது தொடர்ந்து 12 இறுதிப்போட்டிகளில் பட்டம் வென்ற சிறப்பை பெற்றுள்ள 3 ஆவது வீரராகிறார் அவர்.

20 ஆண்டுகளுக்கு முன்பாக பிஜான் போர்க், ஜான் மெக்கன்ரோ ஆகியோர் 12 போட்டிகளில் தொடர்ந்து வென்ற சிறப்பை பெற்றுள்ளனர்.




# நியூசிலாந்து வீரர் ஷேன் பொண்ட் நவம்பரில் போட்டிகளில் பங்கேற்பார்?




நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷேன்பொண்ட் நவம்பர்மாத இறுதியில் போட்டிகளில் பங்கேற்பார் என தெரிவிக்கப்படுகிறது.

முதுகெலும்பில் காயமேற்பட்டதில் அவருக்கு ஆகஸ்ட் மாதம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அவர் குணமடைந்துள்ள நிலையில் வரும் கிறிஸ்மஸ்சுக்குப்பிறகு கழக மட்டப்போட்டிகளில் பங்கேற்க அவர் திட்டமிட்டிருப்பதாகவும் பின்னர் 2005 பெப்ரவரியில் அவுஸ்திரேலியாவுக்கெதிரான 3 டெஸ்ட் போட்டியிலும், 5 ஒருநாள் போட்டியிலும் பங்கேற்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் தான் குணமடைந்திருப்பதாகக் கூறுவது எனக்குப் பெருமையளிக்கிறது. என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அவர் மீண்டும் போட்டிகளில் பங்கேற்க அவரின் முதுகுக்காயம் இடம் கொடுக்காது விட்டால் அவரது திறமை முற்றுப்பெறும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## சிந்தனைக்கு

எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்; எமது இனத்தின் ஆன்மா.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com


## நட்டமல்ல....!

யுத்த நிறுத்த உடன்பாட்டின் பின்னர் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக மேற்கொண்ட உலங்கு வானூர்தி (ஹெலிகொப்ரர்) பறப்பினால் சிறிலங்கா விமானப் படைக்குப் 15கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது எனச் சிறிலங்கா விமானப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இந்நட்டத்திற்கு சமாதானத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், அரச பிரதிநிதிகள், விடுதலைப் புலிகள் எனப் பலதரப்பினையும் ஏற்றியிறக்கியமையே காரணம் எனவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

விமானப்படைத்தரப்பு இச் செலவீனத்தை நட்டம் எனக் குறிப்பிட்டமையால் இதற்காக அது கவலைப்படுவது போன்றதொரு நிலை காணப்படுவதாக உள்ளது. வேறுவிதமாகக் கூறுவதானால் சமாதான முயற்சிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இப் பறப்புக்கள் குறித்து விமானப்படைத்தரப்பு கவலை கொண்டுள்ளது போல் தெரிகிறது.

ஆனால் கடந்த மூன்றாண்டுகளில் விமானப்படைத்தரப்பில் இருந்து சமாதானத்திற்கென 15கோடி ரூபா மட்டுமே செலவீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் மிகச்சிறிய தொகையே. ஏனெனில் நாட்டில் அமைதிக்கும் சமாதானத்திற்குமென 15 கோடி ரூபா செலவீடு செய்தல் என்பது ஒன்றும் பாதகமான விடயமல்ல.

சிலவேளைகளில், நிரந்தர சமாதானமோ, அரசியல் தீர்வோ கிட்டாத சூழ்நிலையில் இச்செலவீடு தேவையற்றது எனக் கருதினும் அது தவறானதே ஆகும். ஏனெனில் கடந்த மூன்றாண்டுக்காலத்தில் அமைதி நிலவியுள்ளது என்பதே இச் செலவினை விடப் பெரியதொன்றாகும். மாறாக இம் மூன்றாண்டுகளில் யுத்தம் நடைபெற்றிருக்குமானால் விமானப்படை செய்திருக்க வேண்டிய செலவு இதனைவிட நிச்சயம் பெரிய தொன்றாகவே இருந்திருக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளும் யுத்தம் ஒன்று நடைபெற்றிருக்குமானால் விமானப்படைக்கு பெரும் இழப்பு / செலவீடு ஏற்படுவதற்குப் பல்வேறு காரணிகள் இருந்திருக்கும். தாக்குதல்களுக்கான பறப்பு, படைத்துறைத் தளபதிகள், அதிகாரிகளை ஏற்றி இறக்குதல், பாதுகாப்பு அமைச்சைச் சார்ந்தவர்களின் பறப்புக்கள், காயமடைந்த, இறந்த படையினரை ஏற்றியிறக்கல் எனப் பெரும் தொகையில் செலவீடு ஏற்பட்டிருக்கும். இது பலநூறு கோடிரூபாவிற்கு மேல் நிச்சயம் இருந்திருக்கும்.

இதனைத்தவிர களமுனையில் உலங்குவானூர்திகள் தாக்குதலுக்கு உள்ளாகி வீழ்ந்து நொருங்குதல், அதிகமான பறப்புக்களால் வானூர்திகள் பழுதடைதல், வீழ்ந்து நொருங்குதல் என இழப்பும் பெருமளவில் அதிகரித்ததாகவே இருந்திருக்கும். ஆனால் சமாதானத்திற்கான பறப்புக்களில் சிறிலங்கா விமானப்படைத்தரப்புக்கு அத்தகையதொரு இழப்புகள் எதுவும் இல்லை.

ஆகையினால் சிறிலங்கா விமானப்படை சமாதானப் பறப்பிற்காக ஏற்பட்டுள்ள நட்டம் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. சமாதான நடவடிக்கைகள் நிரந்தரமற்றவையாக- தற்காலிகமானவையாக இருப்பினும் கூட இதனால் விமானப்படைக்கு நட்டம் ஏற்பட்டுவிட்டதாகக் கொள்வதற்கு இல்லை. மாறாக நாட்டிற்கும், விமானப்படைக்கும் இலாபமே ஏற்பட்டுள்ளது.

இதனைத்தவிர ஒப்பிட்டு ரீதியில் சமாதானத்திற்கென விமானப்படை ஆற்றிய சேவை குறைந்தது என்றே சொல்லுதல் வேண்டும். ஏனெனில் யுத்தத்தில் அது ஆற்றிய சேவையானது பெரும் அழிவுகளுக்கும், சேதங்களுக்கும் காரணமாக இருந்துள்ளது. பல நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாவதற்கும் அது காரணமாக இருந்துள்ளது. ஆகையினால் சமாதானத்திற்கெனப் பெரும் பங்காற்றவேண்டியது அதன் தார்மீகக் கடமையாகும்.

இதேவேளை, இலங்கையில் சமாதானம் நிலை நிறுத்தப்படுதல் வேண்டும் என்பதற்காக சில நாடுகளும் சில சர்வதேச அமைப்புக்களும் மேற்கொள்ளும் செலவீடுகளுடன் ஒப்பிடுகையில் விமானப்படையின் இச்செலவீடு சொற்பமானதாகும். யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்களே சமாதானத்திற்கெனப் பல மில்லியன் டொலர்களைச் செலவீடு செய்யத் தயாராகவுள்ளனர்.

ஆகையினால் சிறிலங்கா விமானப்படை செய்துள்ள தொன்றும் பெரியதொன்றல்ல. யுத்தகால வருடாந்தச் செலவீட்டில் ஒரு சிறுதொகையையே சமாதானப்பணிக்கென அது செலவிட்டுள்ளது. இதனை நட்டம் எனக் கூறுவதற்கு சமாதானத்தின் மீது அவர்கள் அர்ப்பணிப்பற்றவர்களாக உள்ளமையே காரணமாகும். ஏனெனில் விமானப்படைக்கு ஏற்பட்ட செலவை நாட்டின் அமைதிக்கும், சமாதானத்திற்குமென இடப்பட்டுள்ள மூலதனம் என்றே கொள்ளுதல் வேண்டும். யுத்தத்திற்கான செலவீடு அழிவிற்கானதெனில்,- சமாதானத்திற்கான செலவீடு ஆக்கத்திற்கானது என்பது புரிந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

# புலிகளின் அரசியல் விவகாரக் குழுவில் விசேட தூதுவர் சூல்ஹெய்ம் உரை



நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் ஜெனீவாவில் விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் கூட்டத்தின் மூன்றாம் நாள் அமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

மூன்றாம் நாள் அமர்வுகளில் வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பிதா. கருணாரட்ணம் தலைமையிலான குழுவினரும் சென்ற சனிக்கிழமை மாலை ஜெனீவா வந்தடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் பங்கேற்றனர். எரிக் சூல் ஹெய்ம் அங்கு உரையாற்றுகையில், சமாதான நடவடிக்கையை முன்னெடுப்பதில் இடம்பெயர்ந்த தமிழினம் தகுந்த அக்கறையை வழங்கியுள்ளது என்று தெரிவித்ததுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் மறுபடி தொடங்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாகப் பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறினார்.

# தமிழ் பேசும் மக்களைப் பிளவுபடுத்த சில தீய சக்திகள் திட்டமிட்டிருக்கின்றன

## மன்னார் சம்பவங்கள் தொடர்பாக இனியவன்

தமிழ்மொழி பேசும் மக்களை பிளவுபடுத்த வேண்டும் என்று சில சக்திகள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் கூறியுள்ளார். தலைவரின் பணிப்பிற்கு அமைவாக சமாதானத்திற்கான அர்ப்பணிப்புடன் தாம் செயற்பட்டு வருவதாகவும் கடந்த இரண்டரை ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். மன்னார் சம்பவம் தொடர்பாக இனிவன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். மன்னார் கரிசல் பகுதியில் முஸ்லிம் இளைஞன் ஒருவர் 8.15 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து 9மணிக்கு தமது காரியாலயத்தைச் சூழ்ந்துள்ள பகுதியில் பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர் என்றும், நள்ளிரவு 12.10 மணியளவில் தமது காரியாலயங்கள் தாக்கப்பட்டதாகவும் இனியவன் கூறியுள்ளார். இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயலாக இருந்துள்ளது என்றும் தமது முகாம் மீதான தாக்குதலுக்கு முழுதாக பொலிசாரின் ஆசி இருந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக 10 பொலிசாரை அடையாளம் கண்டுள்ளதாகவும் இதனை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் தெரிவித்திருப்பதாகவும் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் மன்னார் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற ஒரு தனி நபரின் கொலையை தம்மீது சுமத்துவதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமக்கும் அந்தக் கொலைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையெனவும் அவர் கூறினார்.

தமிழ், முஸ்லிம் மக்கள் என்பதற்கும் அப்பால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வுடனும் தமிழ்மொழி பேசுபவர்கள் என்ற உணர்வுடனும் செயற்பட வேண்டும். மன்னார் மாவட்டத்தில் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் மதங்களுக்கும், மக்களுக்குமிடையே பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு சிலர் குளிர்காய முற்பட்டு வருகின்றார்கள். இவர்கள் தேச விரோத கும்பல்களாக இருக்கின்றார்கள். பொலிசார் மற்றும் இராணுவத்துடன் சேர்ந்து இயங்குபவர்களாகவுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைக்கு. வந்த பின்னர் மன்னாரில் இடம்பெற்று வந்த சில சமூகவிரோதச் செயல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இவை தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் இது அவர்களுக்கு பிரச்சினையாக இருப்பதே இந்த நடவடிக்கைகளுக்கு காரணம் என்றும் கூறினார். மன்னார் மாவட்டம் இன்று போதைப்பொருளின் கேந்திர நிலையமாக மாறியுள்ளது. இளம் சமுதாயத்திற்கு இதனை அடிமைப் படுத்தும் சில நடவடிக்கைகள் எடுக்கப பட்டுள்ளது. இதனை விட ஆபாசப் படங்களை விநியோகித்து சமுதாய சீரழிவிற்கு இட்டுச் செல்கின்றனர். இதுவரை இதில் நன்றாகச் செயற்பட்டு வந்தவர்கள் தற்போது மதம் என்ற ஒன்றினை வைத்த தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையில் பிளவையேற்படுத்தவேண்டுமென்று செயற்படுகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற கொலைக்குக் காரணம் என்ன என்று அறியாமல் திட்டமிட்ட முறையில் உடனடியாகத் தமது இயக்கத்தின் காரியாலயத்தின் மீது தாக்குதல் நடத்தியமை தவறானது. இந்தக் கொலைக்கான உண்மையான நிலை என்னவென்று விசாரணை செய்து நடவடிக்கையெடுக்க வேண்டும். ஆதாரங்கள் எதுவுமின்றி குற்றச்சாட்டினை முன்வைப்பது கவலைக்குரிய ஒன்று என்றும் கூறினார். (32)

-ஊர்காவற்படையினர் விவகாரம்

# திருமலைக்கு அரச பிரதிநிதி புலிகளைச் சந்திக்க விஜயம்

(திருமலை)

தமிமீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவற்படை வீரர்களையும் விடுதலை செய்வது தொடர்பாக அரசாங்கம் முக்கிய பிரதிநிதி ஒருவரை திருகோணமலைக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இது தொடர்பில் பேச்சு நடத்த கிளிநொச்சிக்குச் சென்றமையால் அரசாங்கம் அனுப்பிய பிரதிநிதியிடம் எழிலனைச் சந்திக்க முடியவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் இன்று எழிலன் திருகோணமலைக்குத் திரும்புவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது. கோமரங்கடவல விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடிய இரு ஊர்காவற் படைவீரர்களை விடுதலைப் புலிகள் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

தமது தரப்புப் போராளிகளை அரசாங்கம் விடுதலை செய்தால் மட்டுமே ஊர்காவற் படையினரை தாம் விடுதலை செய்ய முடியுமென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இதேவேளை விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவற் படையினரையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி கைது செய்யபட்டுள்ள ஊர்காவற்படை வீரர்களின் உறவினர்கள் 29ஆவது நாளாக உண்ணாவிரப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்பாக தமது உறவினர்களின் விடுதலைக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் நாடளாவிய ரீதியில் தமது போராட்டத்தை விஸ்தரிக்கப் போவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இந் நிலையிலேயே அரசாங்கம் தனது தரப்பு பிரதிநிதி ஒருவரை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (32)

# வாக்குறுதிகளைக் கைவிட்டதினால் த.தே.கூட்டமைப்பினால் உதவ முடியாது!

## சனாதிபதிக்கு இரா. சம்பந்தன் கடிதம்

ஜூன் பத்தாம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவுக்கு அளித்த உறுதிப்பாட்டிலிருந்து நீங்கள் பின்நோக்கிச் செல்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் உதவமுடியாது" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இராசம்பந்தன், சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிற்கு நேற்று தொலைநகல் பக்ஸ் மூலம் அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அறிக்கையை நிராகரித்து இக்கடிதம் உத்தியோகபூர்வமாக பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு அனுப்பிய கடிதம் வருமாறு:

தேசிய ஆலோசனைச் சபை தொடர்பாக, செப்ரெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்டு, தபால் மூலம் நான் பெற்றுக்கொண்ட கடிதம் சார்பாக அறியத்தருவதாவது:-

இலங்கை தமிழரசுக் கட்சியின் பேரால் தெரிவு செய்யப்பட்ட 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதும் அதன் பங்காளிக்கட்சிகள் அங்கம் வகிப்பதுமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் செப்ரெம்பர் 22 ஆம் திகதி கூடி, மேற்கூறப்பட்ட சபையின் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றாது என்று ஏகமனதாகத் தீர்மானித்தது.

பாராளுமன்றக் குழுவின் ஏகமனதான அபிப்பிராயம் வருமாறு;

ஜூன் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுவை நீங்கள் சந்தித்துப் பேசிய போது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகளின் சில அம்சங்களை ஏற்காவிட்டாலும், அம்முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் நீங்கள் அச்சந்திப்பின் போது மிகத்தெளி வாகத் தெரிவித்திருந்தீர்கள். இடைக்காலத தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஒரு ஒழுங்குக்கு வந்த பின்னர் நீங்கள் எடுக்கவிருக்கும் உத்தேச நடவடிக்கை பற்றியும் சுருக்கமாக அப்போது விவரித்திருந்தீர்கள்.

ஜூன் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுவிடம் தெளிவாகக் கூறிய கொள்கையை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். சனநாயகத் தமிழ் அரசியல் தலைமைத்துவத்திற்குத் தாம் வழங்கிய உறுதிப்பாடுகளை சிங்கள் அரசியல் தலைமைத்துவம் கௌரவிக்கத் தவறியதே தற்போதைய மோதலுக்கான முக்கிய காரணியாகும். ஜூன் மாதம் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவிற்கு அளித்த உறுதிமொழியிலிருந்து நீங்கள் பின்நோக்கிச் செல்வதற்கு நாங்கள் உதவ முடியாது என்பதே எங்களின் அபிப்பிராயமாகும்.

இச்சூழ்நிலையில், மேற் கூறப்பட்ட தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்ள மாட்டோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)



விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவிற்கும், விதார் ஹெல்கேசனுக்குமிடையிலான சந்திப்பில்

## கைதடி பால தற்காலிக வீதியில் பயணிகள் பேருந்து குடைசாய்ந்தது

முகமாலையில் இருந்து 80 பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் பேருந்து ஒன்று நேற்று மாலை கைதடிப் பாலத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக தற்காலிகமாக இடப்பட்டுள்ள வீதியில் குடை சாய்ந்துள்ளது. மேற்படி தற்காலிக வீதியின் சீரற்ற தன்மை காரணமாகவே இப்பேருந்து குடைசாய்ந்தாலும் பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (33)

## மன்னாரில் அமைதியை நிலைநாட்ட நல்லிணக்கக் கலந்துரையாடல்

மன்னாரில் ஏற்பட்ட பதட்ட நிலையை முடிவுக்குக்கொண்டுவரும் முகமாக நேற்றுக்காலை கனிஷ்ர சனசமூக நிலையத்தில் அப்பகுதியிலுள்ள சனசமூக நிலையத்தில் பள்ளி வாசல் பிரமுகர்களுடன் நல்லிணக்கக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பின்னர் மாலை மன்னார் அரசாங்க அதிபர் பணிமனையில் அரசாங்க அதிபர் விசுவலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இச்சந்திப்பில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் போன்று இனிமேலும் நடக்க அனுமதிப்பதில்லை எனவும் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. (மி)

## உலக வங்கிப் பிரதிநிதிகள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்



யாழ்.குடாநாட்டினில் உலக வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களைப் பார்வையிட மீண்டும் உலக வங்கியின் அதிகாரிகள் குழுவொன்று யாழ்.விஜயம் செய்துள்ளது.

யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனை சந்தித்து அவரது அலுவலகத்தில் பேச்சுக்களை நடாத்திய குழுவினர் பின்னர் கொழும்புத் துறைப்பகுதியில் பூரணமாகக் கட்டி முடிக்கப்படாத வீடொன்றினை நாடாவெட்டித் திறந்து வைத்தனர்.

ஆறிற்கும் அதிகமான பிக்கப் வானத்தில் விஜயம் செய்த குழுவினர் குறித்த வீட்டினை திறந்து வைத்ததுடன் பின்னர் கொழும்புத்துறை தும்பு தொழிற்சாலைப்பகுதிக்கும் விஜயம் செய்தனர்.

பின்னர் தென்மராட்சியின் கோயிலாக்கண்டிப் பகுதியினில் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உலக வங்கி உதவியுடன் முன்னெடுக் கப்படுகின்ற வீடமைப்புத் திட்டமொன்றினையும் குழுவினர் பார்வையிட்டனர். (33,27)

## மின்சாரம் தடைப்படல்

மின் திருத்த வேலை காரணமாக A-9 வீதியில் டிப்போச் சந்தியிலிருந்து கரடிப்போக்குச் சந்தி வரைக்கும் இன்று காலை 8.00மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை மின்சாரம் தடைப்படும் என மின்சார சபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கின்றனர்.

### பேச்சு...

இந்தப் பயணத்தின் பொழுது ஐரோப்பிய நாடுகள்ளைச் சேர்ந்த பல இராஜதந்திரிகளையும் சந்தித்து எங்கள் நிலைப்பாடுகளையும் தெளிவுபடுத்துவதோடு பல நாட்டு அரச அதிகாரிகளையும் சந்தித்து அவர்களுக்கும் எங்களுடைய நிலைப்பாடு சம்பந்தமாக தெளிவாக்க உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

சனாதிபதியினால் புதிதாக நேற்று அமைக்கப்பட்டுள்ள குழு ஒன்று கொழும்பில் கூடி உள்ளது. அது பற்றி உங்கள் கருத்தென்ன எனக் கேட்டபோது.

சனாதிபதியால் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள குழுவில் எமக்கு நம்பிக்கையில்லை எனவும் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய எமது மக்களினுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஆக்கபூர்வமான எந்தத் தீர்மானங்களையும் கடந்த காலங்களில் எடுக்கமுடியாமல் போய் விட்டது. அந்த வகையில் எங்களுக்கு இந்தக் குழுக்களில் நம்பிக்கை இல்லை.

இது ஒரு பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுப்பதற்கான காலத்தை இழுத்தடிக்கும் ஒரு உத்தியாகத்தான் நாங்கள் இந்தக் குழுக்கள் அமைகின்ற செயற்பாடுகளைப் பார்க்கின்றோம்.

ஏனெனில் தற்பொழுது இந்தப் பேச்சுக்களைத் தொடங்கக்' கூடிய சாதகமான சூழல் கனிந்திருக்கின்ற நிலையிலும் அரசாங்கம் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு காலத்தைக் கடத்திவருகின்ற நிலைமையைத் தான் நாங்கள் அவதானிக்கின்றோம்.

ஏனெனில் எதிர்க்கட்சிகள் விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைவரை பின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு தனது பூரண ஆதரவைத் தருவதாகக் கூறி இருக்கின்றது. அந்த வகையில் அரசாங்கத்திற்கு ஒரு முழு அளவிலான ஆதரவு கிடைத்திருக்கின்றது.

ஒருகாலமும் இந்த எதிர்க்கட்சிகள் முன்வந்து இந்தப் பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகளுக்குத் தமது பூரண ஆதரவைத் தெரிவித்தது இதுதான் முதல் தடவை.

இதை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு பேச்சுக்களைத் தொடங்கலாம் என்றார்.

### ஆயுதக்...

திறன் கொண்ட பீரங்கிகளையும் கொள்வனவு செய்யவும் விமானப்படையினருக்கு மூன்று போர் விமானங்களைக் கொள்வனவு செய்யவும் அமைச்சரவை அங்கீகாரமளித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (32)

### பேச்சுவார்த்தைக்கு...

ணக்கம் என்பனவற்றுக்கான ஆலோசனைப் பேரணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோது அவர் மேலும் தெரிவித்தாவது;

அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையை எடுத்தாலும் அது ஐக்கிய இலங்கையின் கட்டமைப்புக்குள் அமுலாக்கப்படும். தேசத்தின் பாதுகாப்பும் நாட்டின் இறைமையும் உத்தரவாதம் செய்யப்படும் என அவர் கூறியுள்ளார்.

சமாதானத்தை அடையும் முயற்சிகளில் பகிரங்கமாகவும், சகல தரப்பினரையும் சேர்த்துக் கொள்ள நடந்து கொள்ளும் கொள்கையையும் அரசாங்கம் கொண்டுள்ளதாகவும், மக்கள் ஆதரவு பெற்ற பிரதிநிதிகள் சிவில் சமூக மதத் தலைவர்கள் போன்றவர்களின் பங்களிப்பின்றி நிலையான சமாதானம் உருவாகாது என அரசாங்கம் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையிலான சமாதான நடைமுறைகள் பற்றிய கலந்துரையாடல்கள் தொடர்பான தேசிய மன்றமாக இந்த தேசிய ஆலோசனை சபை விளங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை முன்னேற்றம் பற்றி மக்களுக்கு விளக்கமளிக்கும் அமைப்பாகவும் அது விளங்கும் எனவும் பேரவையில் அங்கம் வகிப்போர் தமது கருத்துக்களையும், யோசனைகளையும் சமர்ப்பிக்க முடியும் என்றும் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரும் கருத்துத் தெரிவிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானம் தொடர்பான சனாதிபதியின் தேசிய ஆலோசனை சபையின் அங்குராப்பணக் கூட்டம் நேற்று நடைபெற்றது. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி பிரதி நிதிகளும் மதகுருமார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும் பங்கேற்றனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, பி. சந்திர சேகரனின் மலையகமக்கள் முன்னணி, மனோகணேசனின் மேல் மாகாண மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஆலோசனைசபை தொடர் பில் தமது ஆர்வத்தை காட்டிய போதும் அந்தக் கட்சியால் கோரப்பட்ட நேற்றைய நிகழ்வுக்கு முன்னரான சந்திப்புக்கு சனாதிபதி அனுமதி வழங்காமையால் அந்தக் கட்சி நிகழ்வில் பங்கேற்கவில்லை ஜாதிகஹெல உறுமய தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையுடன் பேச்சு நடத்த சனாதிபதி உறுதியளிக்கும் பட்சத்திலேயே இந்த ஆலோசனை சபையில் அங்கம் வகிக்க முடியும் என தெரிவித்துள்ளது. இதேவேளை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காமல் அமைக்கப்படும் இந்த ஆலோசனைசபை அர்த்தமற்றது என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

### சமாதான...

உரையாற்றுகையில், சமாதான நடவடிக்கைகள் கைகூடாத நிலையிலும் விடுதலைப்புலிகள் அதற்கான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பது மகிழ்ச்சிக்குரியது எனத்தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் சுவிஸ் பல்கலைக்கழக பேராசிரியரும், சுவிஸ் கூட்டாட்சி விவகார நிபுணருமான பிலினரும் கலந்து கொண்டார்.

இந்த கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளான அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பா.நடேசன், பரா, இ.கௌசல்யன், செ.புலித்தேவன், தமிழ்விழி, செல்வி ஆகியோரும், சிரான் பணிப்பாளர் இ.செல்வின், சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன், பொருளியல் நிபுணர் ஜெ.மகேஸ்வரன், சட்டநிபுணர்களான சிவாபசுபதி, விஸ்வேஸ்வரன், போல் டொமினிக், நேரு குணரட்ணம், அன்ரன் பொன்ராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### 12 வேங்...

அமைக்கப்பட்டுள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவுச் சதுக்கத்தில் சிறப்பான முறையில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிகழ்வை முன்னிட்டு பொது இடங்கள், விடுதலைப்புலிகளின் பாசறைகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு மஞ்சல் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

(33, 27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


17 ஆம் ஆண்டு நினைவில்...
மேஜர் அப்துல்லா
கப்டன் நளன்
கப்டன் மிரேஸ்
கப்டன் ரகு
05.10.1987 அன்று வஞ்சனையாளர்களின் வலை விரிப்பால் வீரச்சாவடைந்த பன்னிரு மாவீரர்கள் நினைவு நாள்
லெப். அன்பழகன்
லெப். தவக்குமார்
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
கப்டன் கரன்
2ஆம் லெப் றெஜினோல்ட்
விடுதலைப்போர் வரலாற்றில்
விதையான முத்துக்களே!
எதிரிக்கு புதிரான
எமதமிழ்ப் புலிகளே!
ஆண்டுகள் பல கடந்தும
மீண்டெழும் உம இலட்சிய தீயில் – தமிழர்
ஆர்கின்ற செய்தியினை – உமக்கு
அணிவிப்போம் மாலையாக..
கப்டன் பழனி
2ஆம் லெப் ஆனந்தகுமார்
ஈழநாதம்